
# இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு




தோழர் பாலன்

# இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு

தோழர் பாலன்

வெளியீடு
தோழர் பதிப்பகம்

முதற்பதிப்பு : ஜூன் 1, 2016

நூல் தலைப்பு : இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு

நூல் ஆசிரியர் : தோழர் பாலன்

வெளியீடு : தோழர் பதிப்பகம்

தொடர்புக்கு

தொலைபேசி : 00447753465573

மின்னஞ்சல் : tholar2003@hotmail.com

பக்கம் : 58 பக்கங்கள்

உரிமை : மக்களுக்கு

விலை : 25 (இந்திய ரூபா)

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப்
போராடி
உயிர் நீத்த
மக்கள் அனைவருக்கும்
சமர்ப்பணம்

# உள்ளடக்கம்


| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அணிந்துரை | 01 |
| 2. | முன்னுரை | 05 |
| 3. | இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு | 07 |
| 4. | இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு | 12 |
| 5. | இலங்கையில் இந்தியாவின் பொருளாதார ரீதியிலான தலையீடு | 16 |
| 6. | இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு | 43 |
| 7. | இந்திய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடுவது எப்படி? | 55 |

# அணிந்துரை

# இலங்கை இந்தியாவின் அடிமைத் தேசம்

இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலம் அல்லது அடிமைத் தேசம் என்று இந்தியப் பெரு முதலாளிகளின் பொதுப் புத்தியாக மாறி விட்டது. இந்தியாவில் இருந்து இலங்கையைப் பிரிக்கமுடியாது, பிரிக்க கூடாது என்பது தான் இந்தியாவின் புவியியல் சார்ந்த அரசியல் நிலைப் பாடு. இதில் சிங்களவர், தமிழர் என்ற இன வேறுபாடு இல்லை.

இலங்கை ஆங்கில காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு முன்பே இந்தியப் பெரு முதலாளிகள் தங்கள் முதலீடு களை அங்கு நிறுவி இருந்தனர்.

இந்தியா ஆங்கில காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலைப் பெற்றபின் இந்தியப் பெரு முதலாளிகள் தன் அதிகாரத்தை அண்டை நாடுகளிடம் நிறுவத் தொடங்கினர்.

1954இல் இந்தியா, சீனா, பர்மா, இந்தோனேசியா, இலங்கை நாடுகளின் ஒருங்கிணைப்பில் “பஞ்சசீலக் கொள்கை” உருவாக்கப்பட்டது. இதில் அடிப்படைக் கொள்கையாக ஆசியாவில் உள்ள ஒரு நாடு மற்ற நாடுகளை ஆக்கிரமிக்காதிருத்தல், மற்ற நாடுகளின் உள் சிக்கல்களில் நுழையாமை, அமைதியான வாழ்வுக்காக இணைந்துப் போராடுவது என்ற அடிப்படையில் பஞ்சசீலக் கொள்கையை நடைமுறைப் படுத்துவது என முடிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த கொள்கையை இந்தியா அப்போதே கைவிட்டுவிட்டது.

பஞ்சசீலக் கொள்கையின் பிதாமகன் என்று பீற்றிக்கொள்ளும் இந்தியாவின் நேரு, தன்னுள் உறைந்து போயிருக்கும் அதிகாரத் திமிரும், இந்திய ஆதிக்க வெறியும் இந்தியாவை பலம் மிக்க, அதிகாரம் மிக்க நாடாக உருவாக்க வேண்டும் என்ற வெறி அவரிடம் அதிகம். அதே நேரத்தில் சனநாயகம், சோசலிசம் என்ற தேன் தடவிய பொய்யான சொற்கள் பேசி சிக்கிம், பூட்டான் போன்ற நாடுகளைத் தன் இராணுவப் பலத்தால் இந்தியாவோடு இணைத்தார்.

இந்துக்களின் தேசம் நேபாளம் என்று கூறி இந்தியாவின் அடிமை நாடாக இணைக்க முயற்சி நடந்தது, இன்னும் நடந்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் நேபாளத்தை இந்தியாவோடு இணைப்பதற்கு சீனா ஒரு தடையாக இருக்கிறது. அதே நேரம் இலங்கையை இந்தியாவோடு நேரடியாக இணைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால் தன் அதிகாரத்தை தொடக்க காலம் முதல் நிறுவி வருகிறது.

இலங்கையில் இந்தியாவின் முதலீடு 75%, அது இன்று வரை நீடிக்கிறது. இப்போது பல நாடுகள் முதலீடுகளைச் செய்துள்ளன. ஆனாலும் இந்தியாவின் ஆதிக்கம் மட்டும் குறையவில்லை என்பதை இந்நூல் பறைசாற்றுகிறது. இந்திய முதலாளிகளின் இலாப வேட்டைக்கு சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடு இல்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தேயிலை உற்பத்தி முதன்மை இடத்தை வகிக்கிறது என்றால் மிகையில்லை. ஆனால் ஒவ்வொரு தேயிலைச் செடிக்கு அடியிலும் ஒரு தமிழனின் உயிர் புதைந்துள்ளதை இந்தியாவில் வாழும் தமிழர்கள் அறிவார்களா?

தமிழகத்தில் சில முட்டாள் தலைவர்கள் சொல்கிறார்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து சீனா மூலம் ஏற்படப் போகிறது அதனால் தமிழீழ மக்களுக்கு உதவுங்கள் நமக்கு காப்பாக இருப்பார்கள் என்று. தமிழீழ மக்களை கூலி ஆட்களாக பயன் படுத்தும் தமிழக (ஈனப்பிறவிகள்) தலைவர்களை தமிழீழ மக்கள் நம்புவது அரசியல் அறியாமை என்று தான் சொல்லமுடியும்.

இந்திய அரசு தமிழீழ மக்களை மட்டுமா படுகொலை செய்தார்கள்? இல்லை இந்தியாவில் காஸ்மீரிகள், சீக்கியர்கள், நாகர்கள், மணிப்பூரிகள், அசாமியர்கள், தமிழர்கள் இப்படி நீள்கிறது பட்டியல். இந்தியாவின் கொடுங் கைகள் செய்த கொலைகள் வரிசையில் இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் வேறுபாடு இல்லை என்கிறது இந்நூல்.

இந்திய அரசு தன் முதலீடுகளைக் காக்க யாரையும், எந்த இயக்கத்தையும் அழிப்பதற்கு தயக்கம் காட்டியதில்லை 1971 இல் இலங்கையில் ஏற்பட்ட ஜே.வி.பி புரட்சி இயக்கத்தை சேர்ந்த ஆறாயிரம் பேரைக் கொலைச் செய்தது இந்திய இராணுவம்.

1983 இல் தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயற்சி கொடுத்து, சக தமிழ் இயக்கங்களை, சிங்கள மக்களைக் கொலை செய்ய திட்ட மிட்டதையும் 1987 இல் இந்திய அமைதிப் படை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழீழ மக்களையும், நூற்றுக்கணக்கான பெண்களைப் பாலியல் வன்செயலால் கொல்லப்பட்டதையும் பதிவு செய்துள்ளார்.

மேலும் தமிழீழப் பகுதிகளில் பலாலி விமான நிலையம் நீட்டிப்பு, சம்பூர் அனல்மின் நிலையம், மின்சார ஒப்பந்தம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, இந்திய மருத்துவ மனைகள், தனியார் பல்கலைக் கழகம், தொடர்வண்டி பாதை ஒப்பந்தம், எட்கா ஒப்பந்தம், மன்னார் எண்ணெய் வளம், கனிம வளங்களை கொள்ளையடிக்க ஒப்பந்தங்கள் இப்படி இலங்கை முழுக்க அதிகாரத்தையும் ஆக்கிரமிப்பு செய்து வருவதையும், தென் ஆசியா வின் பேட்டை ரவுடியாக இந்தியா வலம் வருவதையும் ஆவணப் படுத்தி உள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரை தமிழீழப் பகுதியில் இவர்களால் காலூன்ற முடியவில்லை என்பதையும், முள்ளிவாய்க்கால் போர் முடிவுக்கு பின் அங்கு நடக்கும் மாற்றங் களையும், மக்களுக்காக போராடுகிற இயக்கம் அழிக்கப்படும் போது அந்த மக்களின் மாண்புகளும் விழுமியங்களும் அழிக்கப்படும் என்பது எழுதாத உலக நீதியாக மாற்றி இருக்கிறார்கள். ஆம், தமிழீழ மக்களின் வலிகளும் துயரங்களும் எந்த சொல்லிலும் நாம் எழுதிவிட முடியாது.

தோழர் பாலன் அவர்களுக்கு புலிகள் மீது திறானய்வு உண்டு. ஆனாலும் தமிழீழ மக்களுக்காக போராடிய புலிகள் மீது அளப்பரிய மதிப்பும் உண்டு என்பதை கீழ் வரும் வரிகளில் பார்க்க முடியும்.

“இந்தியா எப்போதும் தமிழ் மக்களின் நலனுக்காக பாடுபட்டு வருகிறது. புலிகள் முட்டாள் தனமாக இராசீவ்காந்தியைக் கொன்றதால் தான் இந்தியா புலிகளை அழிக்க இலங்கை அரசுக்கு உதவியது” என்று சிலர் இன்றும் கூட அப்பாவித்தனமாக நம்புகிறார்கள், புலிகள் இராசீவ் காந்தியைக் கொல்லவில்லை என்றாலும் இந்திய அரசால் அழிக்கப்பட்டிருப்பார்கள் என்பதே உண்மையாகும்.

ஏனெனில் புலிகள் தாங்கள் பலமாக இருக்கும் வரையில் தமிழ்ப் பகுதியில் இந்தியாவோ அல்லது வேறு எந்த வெளிசக்திகளோ தமிழ் பிரதேசங்களில் வளங்களை சுரண்டவோ அல்லது கொள்ளை அடிக்கவோ அனுமதிக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டதும் அப்பிரதேசங்கள் யாவும் இந்தியாவுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளன. இதிலிருந்து முழு இலங்கையையும் கைப்பற்றுவதற்காகவே இந்தியா புலிகளை அழிக்க இலங்கை அரசுக்கு உதவியுள்ளது என்பதை உணர்ந்துக் கொள்ள முடிகிறது."

இந்த நூல் ஆசிரியர் இலங்கை மீது இந்தியா பொருளாதார ரீதியாக எப்படி ஆதிக்கம் செலுத்துகிறது என்பதையும் அதனால் ஏற்படும் அரசியல் சிக்கல்களையும் மார்க்சிய வழியில் தீர்வையும் முன் வைத்துள்ளார். உலக மயம், தனியார் மயம், தாராள மயம் என்ற அரசியலை உள்வாங்கிக் கொண்டு, ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களின் விடுதலைக்கு போராடும் நாம் அனைவரும் ஒரு புள்ளியில் இணைய வேண்டும் என்பது இந்நூலின் வழியாக தோழர் பாலன் முன்வைக்கும் கோரிக்கை,

செவிமடுப்போம் கைகோர்போம்... நன்றி !



**தோழர் தமிழ்நேயன்**
**பொதுச்செயலர்**
**தமிழ்த்தேச மக்கள் கட்சி**

சென்னை
15.05.2016

# முன்னுரை

இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவது இந்தியாவின் நோக்கம் அல்ல மாறாக முழு இலங்கையையும் ஆக்கிரமித்து சுரண்டுவதே அதன் நோக்கம் என்பதை சில உதாரணங்கள் மூலம் சுட்டிக்காட்டுவதே இச் சிறு பிரசுரத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் நடந்து முடித்த யுத்தத்தில் அதிக பயன் அடைந் திருப்பது இந்தியா மட்டுமே என்பதை ஆதாரங்களோடு அம்பலப் படுத்துவதே இச் சிறு பிரசுரத்தின் நோக்கமாகும்.

இத்தனை அழிவிற்கு பின்பும் கூட இத்தனை அழிவிற்கும் காரணமான இந்தியாவானது இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவும் என்று சிலர் கூறுவது தமிழ் மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகம் என்பதை சுட்டிக்காட்டுவதே இச் சிறு பிரசுரத்தின் நோக்கமாகும்.

"எட்கா" ஒப்பந்தத்திற்கு எதிராக சிங்கள மக்கள் ஒன்றுபட்டு போராட ஆரம்பித்துள்ளார்கள். எனவே இந் நிலையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களுடன் ஒன்றுபட்டு எதிர்த்தால் அந்த மோசடியான ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போகலாம் என்ற அச்சம் கொண்ட இந்தியாவானது தனது கைக்கூலிகள் மூலம் மீண்டும் இந்திய ஆதரவுக் கோசங்களை தமிழ் மக்கள் மத்தியில் எழுப்ப முனைகிறது. தமிழ் மக்கள் இந்த இந்திய சூழ்ச்சிக்கு மீண்டும் பலியாகக்கூடாது என்று எச்சரிப்பதே இச் சிறு பிரசுரத்தின் நோக்க மாகும்.

இச் சிறு பிரசுரத்தின் நோக்கங்கள் நிறைவேற வேண்டும் என விரும்புகிறேன். அது மட்டுமன்றி இலங்கை மீதான இவ் இந்திய ஆக்கிரமிப்பு குறித்து மேலும் பல எழுத்துகள் வருவதற்கும் உரையாடல்கள் நடப்பதற்கும் இது வழி சமைக்கும் என நம்புகிறேன்.

"ஒரு ஈழப் போராளியின் பார்வையில் தோழர் தமிழரசன்" என்னும் நான் எழுதிய நூலில் இடம்பெற்ற "இந்திய ஆக்கிரமிப்பும் தோழர் தமிழரசனின் தீர்க்க தரிசனமும்" என்ற அத்தியாயம் தமிழ்தேச மக்கள் கட்சியினால் வெளியிடப்படும் "விடுதலை அறம்" என்னும் மாதாந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டது. இதனைப் படித்த பலர் அதனை ஒரு சிறு பிரசுரமாக வெளியிடும்படி கேட்டுக்கொண்டதற்கு இணங்க இச் சிறு பிரசுரம் வெளியிடப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் மிகவும் தேவையானதாக, அவசிய மானதாக கருதப்படும் இச் சிறிய பிரசுரம் வெளிவருவதற்கு ஊக்கமும் உதவியும் அளித்த அனைவருக்கும் நன்றிகள்.



**தோழர். பாலன்**

***01.05.2016***
***இலண்டன்***

# இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பு


இலங்கை இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கிறது. யுத்தம் முடிவு பெற்றால் மக்கள் வளமாக வாழலாம் என ஆட்சியாளர்கள் கூறினார்கள். யுத்தம் முடிவுற்று 7 ஆண்டுகள் கழிந்து விட்ட போதும் பரந்துபட்ட மக்கள் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இலங்கையின் இன்றைய மொத்தக் கடன் தொகை 850,000கோடி ரூபா. என்றுமில்லாதவாறு மிகப் பெரிய கடன் சுமை மக்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பொருட்களுக் கான வட்டி வரியும் 11 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதனால் பொருட்களின் விலை மட்டுமன்றி போக்குவரத்து மற்றும் சுகாதாரம் போன்றவற்றிலும் விலை அதிகரிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

1977 முதல் இலங்கை ஆட்சியாளர்கள் அனைவரும் "தாராள மயமாக்கல்" பொருளாதாரக் கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றனர். இதனால் மக்கள் எந்த வளமும் பெறவில்லை. மாறாக தொடர்ந்தும் நெருக்கடிகளையே சந்தித்து வருகின்றனர். ஆயினும் இலங்கை அரசும் அனைத்து ஏகாதிபத்திய நாடுகளும் இந் நவதாராள வாத பொருளாதார கொள்கைகளை ஆழமாகவும் அகன்ற அளவிலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பாகவே இந் நெருக்கடியினை பயன்படுத்த முனைகிறார்கள். தாராளமயமாக்கல் ஊடாக கிரேக்க நாடு தேர்ந்தெடுத்த ஆபத்தான பாதையிலேயே இலங்கையும் பயணிக்க தொடங்குகிறது.

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் யாவும் வணிகத்தை தாரளமயப்படுத்தும் இலங்கை அரசின் பாரிய செயற்திட்டத்தின் ஒரு பகுதிதான் என்றாலும்கூட இந்த ஒப்பந்தங்கள் மூலம் இலங்கையை விட இந்தியாவே அதிக பயனைப் பெற்று வருகிறது. இந்தியாவைப் போன்று அமெரிக்கா சீனா போன்ற நாடுகளுடனும் இலங்கை ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தபோதும் இந்தியா மட்டுமே பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் ரீதியாவும் இராணுவ ரீதியாவும் இலங்கையில் அதிகளவு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதுவே இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பாக இருக்கிறது.

1983களில் இந்திய அரசு ஈழப்போராளிகளுக்கு பயிற்சி கொடுத்தது. ஆயுதங்கள் கொடுத்தது. பண உதவியும் செய்தது. தமிழ்நாட்டில் தங்குவதற்கு அனுமதியும் அளித்தது. இதனால் ஈழப் போராளிகள் அமைப்புகள் பெரும்பாலானவை இந்திய அரசின் மீது பெரிதும் நம்பிக்கை கொண்டன. பங்களாதேஸ் உருவாக உதவி செய்தது போல் தமிழீழம் உருவாகவும் இந்திய அரசு உதவி செய்யும் என்று இவ் அமைப்புகள் நம்பின. 1984 பொங்கலுக்கு இந்திய அரசின் உதவியுடன் தமிழீழம் பிறக்கும் என்று "டெலோ" இயக்கம் பிரச்சாரம் செய்தது. தமிழக தலைவர்களும் இத்தகைய நம்பிக்கையை விதைத்தார்கள். ஆனால் இதற்கு மாறாக தமிழகத்தில் தோழர் தமிழரசன் "இந்தியா ஒருபோதும் தமிழீழத்தை ஆதரிக்காது. இந்திய அரசு போராளிகளுக்கு உதவுவது என்பது இலங்கை முழுவதையும் தனது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வருவதற்கே. பங்களாதேசில் தனது நோக்கம் நிறைவேறியதும் எப்படி தான் பயிற்சி கொடுத்த போராளிகளை அழித்ததோ அதேபோன்று இலங்கையிலும் தனது நோக்கம் நிறைவேறியதும் ஈழப் போராளிகளை இந்திய அரசு அழிக்கும்!" என்றும் கூறினார். (இந்திய நக்சலைட் புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த தோழர் தமிழரசன் 1984ல் தமிழ்நாடு பொதுவுடமைக்கட்சியை நிறுவி தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர். மாக்சிய லெனினிய மாவோயிச சிந்தனைகளை தன் தத்துவ வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டவர். பாராளுமன்ற பாதையை நிராகரித்து ஆயுதம் ஏந்திய மக்கள் யுத்தப் பாதையை முன்னெடுத்த புரட்சியாளர். 1987 செப்டெம்பர் முதலாம் திகதி தமிழக அரசின் உளவுப்படையின் சதி மூலம் கொல்லப் பட்டார்).

தோழர் தமிழரசன் இந்திய அரசு பற்றி இவ்வாறு கூறியதை அப்போது ஈழவிடுதலை அமைப்புகள் ஏற்றுக்கொள்ள வில்லை. இன்னும் சொல்வதானால் இந்திய அரசுக்கு பயந்து தோழர் தமிழரசனுடன் தொடர்பு கொள்வதையே அவ் அமைப்புகள் தவிர்த்தன.



தோழர் தமிழரசன்

ஆனால் தோழர் தமிழரசன் அன்று கூறியவை எந்தளவு உண்மையானவை என்பதை இன்று கண்கூடாகவே நாம் கண்டுள்ளோம். தோழர் தமிழரசனின் இந்த தீர்க்கதரிசனக் கூற்றை ஈழப்போராளி அமைப்புகள் யாவும் அன்று ஏற்றிருந்தால் இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்பைத் தவிர்த்திருக்கலாம். இந்திய அரசின் உதவியுடன் இலங்கை அரசு மேற்கொண்ட முள்ளி வாய்க்கால் அழிவையும்கூட தடுத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.



**தோழர் சண்முகதாசனும், தோழர் மாவோவும் கைகுலக்கிக் கொண்ட போது**

இந்தியாவில் தோழர் தமிழரசன் சுட்டிக்காட்டியதுபோல் இலங்கையில் தோழர் சண்முகதாசன் அவர்களும் இந்திய அரசை நம்ப வேண்டாம் என்று போராளி இயக்கங்களிடம் கேட்டுக் கொண்டார். இந்தியா தமிழ் மக்களின் நலனுக்காக அல்ல மாறாக தனது நலனுக்காகவே இலங்கைப் பிரச்சனையில் தலையிடுகிறது என்பதை அவர் எடுத்துரைத்தார். (தோழர் சண்முகதாசன் இலங்கை கம்யுனிட் கட்சியின் தலைவராக இருந்தவர். இவர் இலங்கையில் மாவோசிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தியவர். பாராளுமன்ற பாதையை நிராகரித்து மக்கள் யுத்தப் பாதையை முன்வைத்தவர். இலங்கையில் புதிய ஜனநாயகப் புரட்சிக்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்). தோழர்கள் தமிழரசன் மற்றும் சண்முகதாசன் ஆகியோர் கூறியது உண்மைதான் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

இவர்கள் மட்டுமன்றி சில புரட்கர அமைப்புகளும் இந்திய ஆக்கிரமிப்பு அபாயம் குறித்து சுட்டிக்காட்டியிருந்தன. அதில் குறிப்பாக தமிழ்மக்கள் பாதுகாப்பு பேரவை இயக்கமும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவானது நம்பிக்கை நட்சத்திரம் அல்ல மாறாக ஒரு எதிரி என்று கூறியது. அவ் அமைப்பைச் சேர்ந்த தோழர் நெப்பொலியன் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்திய புரட்கர சக்திகளுடன் ஜக்கியம் மேற்கொண்டார். இதனால் இந்திய உளவுப்படையானது தனது கைக்கூலி இயக்கமான ஈரோஸ் அமைப்பு மூலம் தோழர் நெப்போலியனை 1986ல் மலையகத்தில் வைத்து படுகொலை செய்தது.



தோழர் நெப்போலியன் என அழைக்கப்பட்ட மனோகரன்

நடந்து முடிந்த நீண்ட போரில் தமிழர்கள் நிறைய இழந்துள்ளார்கள். போரில் வென்றதாக தம்பட்டம் அடிக்கும் இலங்கை அரசும் கூட எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இந்த போரில் அதிக பயன் அடைந்தது இந்தியா மட்டுமே. இலங்கையில் நிலவிய இன முரண் பாட்டைப் பயன்படுத்தி முழு இலங்கை யையும் இந்தியா ஆக்கிரமித்துள்ளது. இந்தியாவின் 30வது (அறிவிக்கப் படாத) மாநிலமாக இலங்கை மாற்றப் பட்டுள்ளது. தற்போது இலங்கை முழுவதும் இந்தியா பொருளாதார ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. இதனால் இலங்கையின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இலங்கையின் இயற்கை வளங்களை பகற் கொள்ளை அடிப்பதிலும், தனது உற்பத்திகளுக்கான வியாபாரச் சந்தையை இலங்கையில் அமைப்பதிலும் இந்தியா முழு மூச்சாக ஈடுபட்டு வருகிறது.

இந்தியாவின் பலவந்தமான ஆக்கிரமிப்பின் முன்னால் இலங்கை ஆட்சியாளர்கள் மண்டியிடுகின்றனர். தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள மானங்கெட்ட செயலில் ஈடுபடும் தலைவர் களால் இலங்கையின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த இந்திய ஆக்கிரமிப்பை உணர்வதோடு அதில் இருந்து எப்படி விடுதலை பெறுவது என்பது குறித்து தமிழ் சிங்கள மக்கள் அனை வரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்தியாவின் தலையீட்டின் காரணமாக இலங்கையில் திரைமறைவில் நடைபெறும் பல விடயங்கள் பற்றி நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு தெரியாது. இலங்கை அரசு இந்திய அரசுடன் செய்யும் ஒப்பந்தங்களின் விபரங்கள் குறித்து இலங்கை மக்களுக்கு முழுவிபரமும் தெரிவிக்கப் படுவதில்லை. பத்திரிகைகளுக்கு மட்டுமல்ல பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே இது குறித்த விபரங்கள் அறிந்துகொள்ள முடிய வில்லை. இதனால் இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கம் என்பது வெறும் கற்பனை என எண்ணுவோரும் இருக்கின்றனர். மேலும் தமிழகத்தலைவர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் சிலர் இலங்கையில் முதலீடு செய்யவும் தமது வியாபாரங்களை பெருக்கிக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருப்பதால் தமிழகத்தில் இருந்தும் இந்த இந்திய ஆக்கிரமிப்புக் குறித்த செய்திகள் வெளி-வராமல் இருக்கின்றன.

# இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு

இந்திய அரசு தமது அண்டை நாடுகளை அச்சுறுத்துவதும் தங்கள் வலிமையை அங்கீகரிக்கும்படி அந்நாடுகளை நிர்ப்பந்திப்பதும் அது வெள்ளைக்காரனின் கருவில் இருக்கும் போதே தொடங்கி விட்டது. 1947 மார்ச்சில் ஆசிய உறவுகள் மாநாட்டில் நேரு பேசும்போது "எங்கள் அண்டை நாடுகள் எதற்கெடுத்தாலும் ஐரோப்பாவைத் தான் நோக்குகின்றன. கடந்த காலத்தில் தங்களுக்கு அனைத்தையும் தந்த நண்பர்களை (இந்தியாவை) அவைகள் மறந்து விடுகின்றன" என்று குறிப்பிட்டார். அரசியல் அதிகாரத்தை கையில் பெற்ற பின் இந்திய ஆட்சியாளர்களின் இந்த 'பெரியண்ணாத்தைக் குணம்' தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வருகின்றது.

சுதந்திரத்திற்குப் பின்னர் 1954ல் இந்தியா ஆசியாவில் பிரபலமாயிருந்த அரசியல் தலைவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்தது. அப்போதைய சீனப் பிரதமர் சூஎன்லாய் பாண்டுங் மாநாட்டிற்கு பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். அதற்கேற்ப 1954ல் பஞ்சசீலக் கொள்கை நிறைவேற்றப்பட்டது. வித்தியாசமான சமூக முறைகள் நிலவிய நாடுகளில் விசேடமாக ஆசிய நாடுகளுக் கிடையேயான சகவாழ்வு, அமைதி மற்றும் நட்புறவை கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே அதனை அவர் தயாரித்திருந்தார். ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதிலிருந்து தவிர்க்கும் கொள்கையில் நிலைத்திருப்பதற்காக ஆசியாவின் மாநாடொன்றுக்கு இவ்வாறான ஒரு பிரேரணையைக் கொண்டுவர வேண்டிய தேவை அந்த நாடுகளின் தலைவர்களுக்கு இருந்தது.

சீனப் பிரதமர் சூஎன்லாய், இந்தியப் பிரதமர் நேரு, பர்மாவின் பிரதமர் ஊனு, இந்தோனேசியப் பிரதமர் சுகர்னோ போன்ற ஆசியாவின் உயர்மட்டத்தில் இருந்த, அந்தந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய, சுதந்திரம் பெற்ற பிரதமர்களாக இருந்த அந்த தலைவர்களினால்தான் பாண்டுங் மாநாடு கூட்டப் பட்டது.

சீனப் பிரதமர் சூஎன்லாய் அவர்களினால் தயாரிக்கப்பட்ட பிரேரணை சூஎன்லாய், நேரு, ஊனு ஆகியவரினது பிரேரணையாக பாண்டுங் மாநாட்டில் கொண்டுவரப்பட்டது. அந்த பிரேரணையை சுருக்கமாக கூறுவதாக இருந்தால் மற்ற நாடுகளை ஆக்கிரமிக்கா திருத்தல், மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாதிருத்தல், அமைதியான சுகவாழ்வுக்காக பஞ்சசீலக் கொள்கையை அமுல் படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.



பர்மா பிரதமர் ஊனு, இந்தியப் பிரதமர் நேரு, பாகிஸ்தான் பிரமர் அலி, இலங்கைப் பிரதமர் ஜோன் கொத்தலாவெல

அன்று இலங்கைப் பிரதமாக இருந்த சேர் ஜோன் கொத்தலாவெல அவர்களும் அம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். இலங்கையின் பிரதமர் என்ற முறையில் கொத்தலாவெல மாநாட்டில் உரை யாற்றி விட்டு இந்திய பிரதமர் நேருவுக்கு பக்கத்தில் இருந்த தனது இருக்கையில் சென்று அமர்ந்தார். அப்போது "நீங்கள் அந்த உரையை பேசுவதற்கு முன் ஏன் என்னிடம் காட்டவில்லை?" என்று நேரு கொத்தலாவெலவிடம் கேட்டார். இவ்வாறு கேட்டதன் மூலம் பஞ்சசீலக் கொள்கையை நிறைவேற்றிய மண்டபத்திலேயே இந்தியா அதனை மீறி விட்டது.

இந்தியாவுக்கு அருகில் சிக்கிம் என்றொரு நாடு இருந்தது. இமயமலையில் நேபாளத்திற்கு அருகில் இருந்தது. 1950ல் சிக்கிம் நாட்டின் மீது மேலாதிக்க ஒப்பந்தத்தை திணித்தார் நேரு. ஜனநாயகப் பற்றுள்ள இந்தியர்களாலேயே கடுமையாக விமர்சிக்கப்பட்ட அவ் ஒப்பந்தப்படி சிக்கிம் இந்திய நாட்டின் பின்தளமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. பின் சிக்கிம் இந்தியாவின் மாநிலமாக பலாத்காரமாக இணைக்கப்பட்டது.


1949இல் பூட்டான் நாட்டின் மீது ஒரு ஒப்பந்தத்தை திணித்தார் நேரு. இந்தியாவின் அனுமதியுடன் தான் பூட்டான் தனது வெளி நாட்டுக் கொள்கையை தீர்மானிக்க முடியும் என வரையறுக்கிறது அவ் ஒப்பந்தம்.

தனது தந்தையின் வழியிலே நடந்த இந்திராகாந்தி 1972ல் பங்காளதேசுக்கு படைகளை அனுப்பி பாகிஸ்தானை துண்டாடினார். பாகிஸ்தான் மீதும் சீனா மீதும் கெடுபிடி போர்கள் தொடுப்பதும், "சந்திக்க தயார்" என சவால் மிரட்டல்கள் விடுவதும் இந்திய ஆட்சியாளர்களின் இடையறாத பணிகளில் ஒன்று ஆகும். தெற்காசிய பகுதி முழுவதற்குமே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று மவுண்ட்பேட்டன் பிரபுவினால் கருதப்பட்ட இலங்கை மீது அவரது இந்திய வாரிசுகள் அக்கறை கொண்டிருந்தது இயல்பானதே. இலங்கையின் இனப்பிரச்சனை முற்றி வெடித்தபோது அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி இலங்கையை தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிட்டனர் இந்திய ஆட்சியாளர்கள்.

நேரு, இந்திராவின் வாரிசான இராஜீவ் காந்தி ஆட்சிக்கு வந்ததும் இலங்கை ஆக்கிரமிப்புக்கான திட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு விரைந்து நடைமுறைப்படுத்தப்பட்டன. தமிழ் போராளிகளுக்கு பண உதவி, ஆயுத உதவி கொடுத்து வளர்த்தது, ஜெயவர்த்தனா அரசை மிரட்டி பணிய வைத்தது, ஆக்கிரமிப்பு படையை இலங்கைக்குள் நுழைக்க அனுமதி எடுத்துக் கொண்டது, தனது உளவுப்படை "ரா" மூலம் போராளிகளுக்கிடையில் சண்டையை உருவாக்கியது, தங்கள் ஆக்கிரமிப்புக்கு பணிய மறுத்த போராளிகள் மீதும் மக்கள் மீதும் போர் தொடுத்தது, இவையனைத்தும் திட்டமிட்ட ஆதிக்க விஸ்தரிப்புவாத முயற்சிகளின் பகுதிகளே.

இலங்கை தலைவர்களில் மகிந்த இராஜபக்ச அவர்களை சீன நாட்டிற்கு சார்பானவர் என்றும் அவர் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர் என்றும் சிலர் சித்தரிக்க முனைகிறார்கள். இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்பை மறைக்க முனைவோரே இப்படி சீன பூச்சாண்டியைக் காட்டுகிறார்கள்.

ஆனால் அவர்கள் எவ்வளவுதான் தலைகீழாக நின்றாலும் மகிந்த இராஜபக்சவின் காலத்தில்தான் இந்திய ஆக்கிரமிப்பு அதிகம் நடந்தது என்ற உண்மையை ஒருபோதும் மறைத்துவிட முடியாது. பொதுவாக ஒரு நாட்டின் அரச தலைவர் ஒருவர் வெளிநாட்டு தூதுவர்களை சந்திக்கச் செல்வதில்லை. மாறாக தூதுவர்கள் தான் ஜனாதிபதியை சந்திக்கச் செல்ல வேண்டும். இதுதான் நடைமுறை. ஆனால் மகிந்த இராஜபக்ச ஜனாதிபதியான உடனேயே இந்திய தூதுவரை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார். பதவியேற்றவுடன் தூதுவர் ஒருவரின் இல்லத்திற்குச் சென்ற முதலாவது இலங்கை ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவே. இவ்வாறு ஆரம்பம் முதல் தனது பதவிக்காலம் முழுவதும் மகிந்த இராஜபக்ச அவர்கள் இந்திய ஆக்கிரமிப்பிற்கு பெரிதும் உதவிய ஜனாதிபதியாகவே இருந்துள்ளார்.




**இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், இந்தியப் பிரதமர் மோடியுடன் மகிந்த இராஜபக்ச**

# இலங்கையில் இந்தியாவின் பொருளாதார ரீதியிலான தலையீடு

தென்கிழக்காசிய பிராந்தியத்தில் இந்தியா ஒரு பலம் வாய்ந்த நாடு. இந்தியாவில் உள்ள முதலாளிகளும் அவர்களது வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கமும், அதன் அதிகார வர்க்கமும், இந்தியா பொருளாதாரரீதியிலும், அரசியல்ரீதியிலும் பலம் வாய்ந்த நாடாக இருப்பதையே விரும்புகின்றனர். இன்னும் சொன்னால் இந்தியா ஒரு வல்லரசாக வேண்டும் என்பது இவர்கள் கனவாக உள்ளது. இவர்களது இந்தக் கனவை நனவாக்க இவர்களது உற்பத்திக்கான பாரிய வர்த்தக சந்தையொன்று இவர்களுக்கு தேவைப்படுகிறது. எனவே தான் இந்தியா தன்னைச் சூழவுள்ள பாகிஸ்தான், பங்களாதேஸ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு போன்ற நாடுகள் மீது ஆதிக்க ரீதியிலான அழுத்தங்களைக் கொடுத்து அந்த நாடுகளின் ஊடாக தனக்குத் தேவையான கச்சாப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும் வர்த்தக சந்தையை தேடிக் கொள்ளவும் முயற்சி செய்கிறது. இதன் மூலம் தனது அயல்நாடுகளில் ஆதிக்கம் செலுத்த இந்தியா முனைகிறது. தென்கிழக்காசியாவில் ஒரு பேட்டை ரவுடியாக இந்தியா தன்னை நிலை நிறுத்த முயல்கிறது. இந்தியாவின் பெரிய சந்தையை மனதில் கொண்டு பெரிய ரவுடிகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளும் இதனை அனுமதிக்கின்றன.

### பலாலி நிலைய விஸ்தரிப்பு

2002ஆம் ஆண்டு இலங்கை பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் திரு. ஒஸ்டின் பெர்ணாந்து. அவர் "My Belt is White" என்ற நூலை எழுதியுள்ளார். அதில் அவர் பலாலி விமான நிலையத்தைச் செப்பனிட இந்தியா முன்வைத்த நிபந்தனைகளைக் குறிப்பிடுகிறார். பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணத்தில் உள்ளது.

எனவே தமிழ் மக்களின் நலனுக்காக இந்தியா இந்த உதவியைச் செய்ய முன்வருகிறது என்றே பலரும் கருதக் கூடும். ஆனால் இந்த திட்டத்திற்கு இந்தியா முன்வைத்த நிபந்தனைகள் ஒன்றுகூட தமிழ் மக்களின் நலனுக்காக முன்வைக்கப்பட்டவை அல்ல. இந்தியா தனது நலனுக்காகவே எதையும் செய்கிறது என்பதை அப்பட்டமாக அவை காட்டுகின்றன. இந்தியா விதித்த முதலாவது நிபந்தனை வேறு நாட்டு விமானங்களுக்கு பலாலியில் அனுமதி அளிக்கக் கூடாது என்பதாகும். இந்த நிபந்தனை "என்றாவது ஒரு நாள் பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாறும்" என்ற தமிழ் மக்களின் கனவில் மண்ணை அள்ளிப் போட்டது. இரண்டாவது நிபந்தனை இந்தியா கேட்கும் நேரங்களில் இந்தியாவிடம் விமான நிலையம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி என்ற போர்வையில் விமான நிலையத்தை அண்மித்த பகுதி மக்களின் காணிகளை நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் ஏற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. இதனால் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களிலும் உறவினர், நண்பர் வீடுகளிலும் வாழ்ந்து வரும் சுமார் 1,500 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நிரந்தரமாக தமது நிலங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பலாலி விமான நிலையத்துக்காக 1984ம் ஆண்டு 665 ஏக்கர் நிலப் பரப்பு சுவீகரிக்கப்பட்டது. தற்போது பலாலி விமான நிலையம் 996 ஏக்கர் நிலப்பரப்பைப் கொண்டுள்ளது.

இந்நிலையில் அபிவிருத்தி என்ற போர்வையில் மக்கள் விருப்பத்துக்கு மாறாக மேலும் நூற்றுக்கணக்காக ஏக்கர் நிலங்கள் பறிபோகவுள்ளன. 246 மயிலிட்டி வடக்கு, 253 பலாலி மேற்கு, 256 பலாலி வடமேற்கு ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளின் கீழ் உள்ள நிலப்பரப்புக்களை விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக் கின்றனர். இந்தப் பகுதிகளில் மீள்குடியேற விருப்பம் தெரிவித்து 1,500 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டு காத்திருக்கின்றன.



பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்கு எதிராக
யாழ். வலிகாமம் மக்களின் போராட்டம்

பலாலி விமான நிலையத்துக்கென சுமார் 665 ஏக்கர் பரந்த நிலப்பரப்பு ஏற்கனவே உள்ள நிலையில் உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கான அபிவிருத்தியை இருக்கும் நிலப்பரப்பிலே மேற்கொள்ள முடியும் என தமிழ் மக்கள் தரப்பில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றபோதும் அதுகுறித்துக் கண்டுகொள்ளப் படாமல் நிலச்சுவீகரிப்பு முயற்சிகள் தொடர்கின்றன. இலங்கையில் உள்ள ஏனைய உள்ளூர் விமான நிலையங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண விமான நிலையமே இரண்டாவது மிக அதிக நீளமான ஓடுபாதையைக் கொண்டுள்ளது. 2,305 மீற்றர் நீளமான ஓடு பாதையை பலாலி விமான நிலையம் கொண்டுள்ளது. திருகோணமலை உள்ளூர் விமான நிலையம் 2,397 மீற்றர் நீள ஓடு பாதையுடன் முதலிடத்தில் உள்ளது. ஏனைய அனைத்து விமான உள்ளூர் நிலையங்களும் அதற்கும் குறைவான அளவு மீற்றர்கள் தூர ஓடுபாதையையே கொண்டுள்ளன.

சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றான இரத்மலான விமான நிலையம் வெறும் 2,000 மீற்றர்கள் நீளமான ஓடு பாதையையே கொண்டுள்ளது.

அவ்வாறாயின் தற்போதுள்ள 2,305 மீற்றர்கள் நீளமான ஓடுபாதையைக் கொண்ட பலாலி உள்ளூர் விமான நிலையத்தை மக்கள் நிலங்களை ஆக்கிரமித்து விஸ்தரிக்க வேண்டிய தேவை என்ன என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. சர்வதேசம் முழுவதும் இருந்து தினமும் 70 இற்கும் அதிகமான விமானங்கள் வந்து செல்லும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் 3,350 மீற்றர்கள் நீளமான ஓடு பாதையையே கொண்டுள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில் பலாலி விமானநிலையத்தை தற்போதுள்ள இடத்தைக் கொண்டே அபிவிருத்தி செய்ய முடியும். இந்நிலையில் அபிவிருத்தி என்ற போர்வையில் இந்தியாவுக்காக பலாலியில் மேலதிக நிலங்களை சுவீகரிக்க முயல்வது ஆக்கிரமிப்பு நோக்கமே என ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் இரணில் விக்கிரமசிங்க "அபிவிருத்தியா? மீள்குடியேற்றமா?" என்ற கேள்வியை எழுப்பிச் சென்றிருந்த நிலையில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் "மீள்குடியேற்றமே எமது தேவை" என வலி வடக்கில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் தெளிவாகக் கூறிவிட்டனர். இதனை அழுத்தமாகத் தெரிவிக்கும் வகையில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களையும் அறிவித்து போராடி வருகின்றனர். அதன் பின்னரும் தமிழ் மக்களின் விருப்புக்கள் கண்டு கொள்ளப்படாமல் ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்ந்து வருவது குறித்து தமிழ் மக்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

## இந்தியாவுக்கு வழங்கப்பட்ட தமிழர் நிலம்

கிழக்கு மாகாணம் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டவுடன் உடனடியாக திரிகோணமலைப் பிரதேசத்தில் 675 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலம் ஒப்பந்தம் மூலம் இந்தியாவுக்கு மகிந்த இராஜபக்ச வினால் வழங்கப்பட்டது. பொருளாதார வலையம் என்ற வகையில் இது வழங்கப்பட்டது. இந்தியாவின் இந்த பொருளாதார வலையத்திற்குள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட செல்ல முடியாது.

“உள்ளே எத்தனை இந்தியர்கள் வேலை செய்கிறார்கள்? அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்?“ என எதுவுமே தெரிந்து கொள்ள முடியாமல் தடுக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் நிலம் இன்னொரு நாட்டிற்கு இப்படி மர்மமான முறையில் எதற்காக வழங்கப்பட்டுள்ளது? ஜனாதிபதி மகிந்தராஜபக்சவே இந்தியாவுக்கு இந்த நிலத்தை வழங்கினார். அவர் ஏன் இவ்வாறு தமிழ் மக்களின் நிலத்தை இந்தியாவுக்கு வழங்கினார்?

இப் பிரதேசம் 2006ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதி இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. இந்த பிரதேசத்தில் கப்பல் திருத்தும் நிறுவனம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருப்பதாக கூறும் இந்தியா மேலும் அங்கு படகு உற்பத்தி, மீன் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறுகிறது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திரிகோணமலைத் துறைமுகத்தை சுற்றி இந்த வலையம் அமைகிறது. தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த, தொடர்ந்தும் வாழும் விசாலமான பூமி அவர்களின் அனுமதியின்றி இந்தியாவுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலத்தை அவர்களின் சம்மதம் இன்றி, அவர்களை அந்த நிலத்தில் இருந்து விரட்டி விட்டு, இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அங்கிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்கள் இன்றும் அகதிகளாக முகாம்களில் வாழ்ந்து வரும்வேளையில், இப்படி இந்தியாவுக்குத் தமிழர் நிலம் வழங்கப்பட்டது குறித்து இன்றுவரை ஒரு தமிழ் தலைவர்கூட ஆட்சேபம் தெரிவிக்காதது பெரும் ஆச்சரியமே! தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் அவர்களின் சொந்த தொகுதியிலேயே இவ்வாறு தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது. அவர் தனது இந்திய விசுவாசம் காரணமாக இது குறித்து எதுவும் பேசாமல் மௌனம் காத்து வருகிறார். அவர் தன் குடும்பத்துடன் இந்தியாவில் கேரளாவில் வாழ்ந்து வருகிறார். அவரது சொந்த தேவைகளை இந்திய அரசே பூர்த்தி செய்து வருகிறது. கடந்த வருடம் அவரது இருதய அறுவைச் சிகிச்சைகூட இந்திய அரசின் உதவியுடன் டில்லி மருத்துவமனையில் நடைபெற்றுள்ளது. எனவே அவர் இந்திய அரசுக்கு எதிராக குரல் கொடுக்காததோ அல்லது தமிழ் மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்காததோ ஆச்சரியமான ஒன்று அல்ல.

**சம்பூர் அனல்மின் நிலையம்**

சம்பூரில் ஒரு அனல்மின் நிலையம் இந்தியா அமைக்கிறது. அத்திட்டத்தின்படி 2012ல் அதன் உற்பத்தியை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் இன்னமும் உற்பத்தி ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் இந்நிலையில் சம்பூரில் ஒரு இறங்கு துறையொன்றை இந்தியா நிர்மானித்துள்ளது. அனல்மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரியை இறக்குவதற்காக இந்த இறங்குதுறை என கூறப்படுகிறது. அதேவேளை புல்மோட்டையிலிருந்து திருமலை இறங்குதுறை வரை இந்தியா அதிவேகப் பாதையொன்றையும் அமைத்து உள்ளது. அதற்கு "காந்தி வீதி" என பெயரும் இட்டுள்ளது. இந்த அதிவேகப்பாதை மக்களுக்காக அமைக்கப்படவில்லை. மாறாக புல்மோட்டையில் காணப்படும் இல்மனைற் மற்றும் தோரியம் போன்ற பெறுமதி மிக்க கனிமத்தை எடுத்துச்செல்லவே இந்த பாதை அமைக்கப்பட்டுள்ளது.




உலக நாடுகள் அனைத்தும் நிலக்கரி மூலம் பெறப்படும் மின் சக்தியிலிருந்து படிப்படியாக விடுபட்டு பாதிப்பற்ற சூரிய ஒளி, மற்றும் காற்று மூலம் மின்சாரம் பெறக்கூடிய பொறிமுறைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கா, ஜேர்மன், சீனா போன்ற நாடுகள் நிலக்கரி அனல் மின் நிலையங்களை படிப்படியாக மூடி வருகின்றன.

இந்தியா கூட அண்மையில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்று சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறும் திட்டத்தில் முதலீடு செய்யவுள்ளதுடன் மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் பூங்காக்களை உருவாக்கத் திட்டமிடுகின்றது. ஆனால் நிலக்கரி மூலம் 500 மெகாவாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்யக் கூடிய சம்பூர் அனல் மின்சார நிலையத்தினை திருகோணமலையில் உருவாக்குவதற்கு இலங்கை மீது இந்தியா தொடர்ந்தும் அழுத்தங் களைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. இது இந்தியாவின் இரட்டை வேடத்தினை நன்கு வெளிப்படுத்துகின்றது.

சம்பூர் நிலக்கரி அனல் மின்நிலையம் அமைப்பது தொடர் பான திட்டம் ஆரம்பம் முதலே சர்ச்சைக்குரியதாகவே காணப்படு கின்றது. இத்திட்டம் தொடர்பான சூழல் பாதிப்பு பகுப்பாய்வு, செலவு நலன் பகுப்பாய்வு மற்றும் சமூகப் பாதிப்பு பகுப்பாய்வு என்பன சம்பூர் மக்கள் இடம் பெயர்ந்து மட்டக்களப்பு முகாம்களில் வாழ்ந்த போதே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களிடம் பரந்துபட்ட அளவில் எவ்வித மான கருத்துக்களும் கேட்கப்படவில்லை. தற்போது 28.03.2016 முதல் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுகிறார்கள். சம்பூர் மகாவித்தியாலயம் பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. இந்நிலைமையில் சம்பூர் நிலக்கரி அனல் மின்நிலையம் தொடர்பாக முன்பு மேற்கொள்ளப்பட்ட சூழல் பாதிப்பு பகுப்பாய்வு, செலவு நலன் பகுப்பாய்வு மற்றும் சமூகப் பாதிப்பு பகுப்பாய்வு என்பவை அடிப் படையில் தவறாகப் போய் விட்டன. ஆகவே இவ்வாய்வுகளை மீண்டும் செய்ய வேண்டியது அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் சட்டரீதியான கடமையாகும்.

சம்பூர் அனல் மின்நிலையம் அமைக்கப்படும் போது கடற் கரைச் சேனைக்கும் சம்பூருக்கும் இடையே அமையப் போகும் இறங்கு துறையிலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வயற் பிரதேசங்களிலேயே சம்பூர் அனல் மின்நிலையம் அமையப் போகின்றது.

நிலக்கரியினை கடற்கரையோரத்திலிருந்து மக்கள் வாழும் பகுதிகளுடாகக் கொண்டு செல்லும் போது பாதிப்பு மிகவும் மோசமாக இருக்கப் போகின்றது. சம்பூர் மற்றும் மூதூர்ப் பிரதேசங்களில் ஒக்டோபர் மாதத்திற்கும் மார்ச் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியானது நெற்பயிர்கள் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியிலே கடலிலிருந்து காற்று தரைப் பகுதியினை நோக்கி வீசுகின்றது. இவ்வாறு காற்று நிலப்பகுதியினை நோக்கி வீசும் போது சாம்பலும் நிலக்கரித் துகள்களும் காற்றினால் அள்ளுண்டு செல்லப்படுமானால் சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், மூதூர், கிளிவெட்டி போன்ற பிரதேசங்களில் காணப்படும் ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்படப் போகின்றன.

கப்பல்களிலிருந்து இறக்கப்படும் போது நிலக்கரி கடலில் சிந்தப்படுமானால் செழிப்பான கொட்டியாரக் குடாவின் மீன்பிடி பாதிக்கப்படப் போகின்றது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகப் போகின்றது. அதே போன்று அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சுடுநீர் திருகோணமலைத் துறைமுக வாயிலில் அமைந்துள்ள செல் வளைகுடாப் பகுதியில் வெளியேற்றப்படப் போவதாக ஆரம்பத் தகவல்கள் தெரிவித்தன. இப்பகுதியில் இறால், நண்டு, கணவாய் போன்ற கடலுயிரினங்கள் அபரிமிதமாக் காணப் படுகின்றன. இதைச் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டிய பின்னர் சம்பூருக்குச் சென்ற சக்தி மற்றும் மீளுருவாக்கம் செய்யக்கூடிய சக்தி வள அமைச்சர் சியம்பலாப்பிட்டிய அவர்கள் அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் சுடுநீர் கொக்கட்டிப் பிரதேசத்தினூடாக குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு கடலுக்குள் செலுத்தப்படும் என கூறியுள்ளார். அவர் அடையாளம் கண்டுள்ள பிரதேசம் உலகில் மிகவும் கவனிப்பாக பேணப்படும் பவளப் பாறைகள் நிறைந்த இடமாகும். எவ்வித சூழல் பாதிப்பு பற்றிய பகுப்பாய்வுமின்றி இவ்விடம் திடீரென எவ்வாறு தெரிவு செய்யப்பட்டது என்பது வேடிக்கையாக உள்ளது.

பொதுவாக 500 மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அனல்மின் நிலையமானது ஒரு வருடத்திற்கு 3.7 மில்லியன் தொன் காபனீரொட்சைட்டையும், 10,200 தொன் நைதரசன் ஒக்சைட்டையும், 10,000 தொன் கந்தகவீரொட்சைட்டையும், 720 தொன் காபனோ ரொட்சைட்டையும், 500 தொன் தூசியையும் வெளியிடுகின்றது. இதற்கு மேலாக ஆசனிக், பாதரசம், குரோமியம், ஈயம், நிக்கல் உள்ளிட்ட இன்னும் பல மூலகங்களை அல்லது நஞ்சுகளை அனல் மின்சார நிலையமானது வெளியிடுகின்றது. இத்தகைய நஞ்சுகள் மூலம் அனல் மின்சார நிலையம் செயற்படும் இடங்களில் வாழும் மக்கள் சுவாசநோய், இதயநோய், நரம்புநோய் உள்ளிட்ட பல நோய்களினால் பீடிக்கப்பட்டு வருடத்திற்கு இலட்சக்கணக்கில் பரிதாபமாக பலியாகி வருகின்றனர்.

**அனல்மின் நிலையத்திற்கு மக்கள் கடும் எதிர்ப்பு!**

சம்பூரில் இந்திய உதவியுடன் அமைக்கப்படும் அனல் மின் நிலையத்திற்கு அப்பகுதி மக்களின் எதிர்ப்பு தொடர்ந்தும் வலுத்து வருகின்றது. போருக்கு பின்னர் சம்பூர் பிரதேசத்தில் தற்போது தான் மக்கள் மீளக்குடியேறி வருகின்ற நிலையில் அனல் மின் நிலையத்திற்கு எதிராக போராட வேண்டிய நிலைக்கு தாங்கள் தள்ளப்பட்டுள்ளதாக கூறுகிறார் சம்பூர் பிரதேச மீனவர் சங்கத்தின் தலைவரான மயில்வாகனம் கிருஸ்ணபிள்ளை.

அனல் மின் நிலையத்தின் தாக்கம் பற்றி நேரில் அறிந்து கொள்வதற்காக ஏற்கனவே அனல் மின் நிலையம் அமைந்துள்ள புத்தளம் மாவட்டம் நுரைச்சோலைக்கு மூதூர் கிழக்கு பிரதேச சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவொன்று அங்கு சென்று திரும்பியுள்ளது. அனல் மின் நிலையமொன்று அமையும் பகுதியில் மக்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளை நுரைச்சோலை பகுதியை நேரடியாக பார்வையிட்ட பின்னரே தங்களால் உறுதிப் படுத்திக் கொண்டதாக அங்கு சென்ற திரும்பிய குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சம்பூர் பகுதியில் அமையவுள்ள இந்திய அனல் மின் நிலையத்திற்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ச்சியான போராட்டங் களை நடத்தி வரும் நிலையில், மூதூர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களும் மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். மூதூர் பசுமை குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்பாட்டத்திலும் பேரணியிலும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், "சம்பூரில் அனல் மின்நிலையம் அமைக்க வேண்டாம்" என்று மும்மொழிகளிலும் சுலோகங்களை ஏந்தி இருந்தனர். போராட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் அவர்கள், சம்பூர் பகுதியில் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படுமாக இருந்தால் திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை போன்ற மாவட்ட மக்கள் பல்வேறு பட்ட நோய்களுக்கு இலக்காவார்கள். அத்தோடு இயற்கைத் தாவரங்களும் அழியும் ஆபத்து நிலவும் எனவும் தெரிவித்ததுடன் இது சம்மந்தமாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களைத் தொடர்ந்து வேடவ இன மக்களும் இந்தியாவால் அமைக்கப்படும் இவ் அனல் மின்நிலையத் திற்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர். அண்மையில் பசுமை திருகோணமலை அமைப்பு மற்றும் இலங்கை பழங்குடியினர் உரிமைகளுக்கான அமைப்பு ஆகியன இணைந்து அமைதியான எதிர்ப்புக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளன. பழங் குடியின வேடவ மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். இயக்கர், நாகர் வழித்தோன்றல்களாக தம்மை குறிப்பிடும் இலங்கையின் பூர்வீக பழங்குடி மக்கள் சம்பூரில் அமைக்கப்படும் அனல் மின்னிலையத்தால் தமது காட்டு வாழ் வாதாரங்கள் பாதிக்கப்படும் அபாயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கையில் அனைத்து இன மக்களாலும் எதிர்க்கப்படும் ஒரு திட்டம் இருக்குமாயின் அது இந்தியாவினால் அமைக்கப்படும் இந்த அனல் மின்திட்டம் ஒன்றுமட்டுமே.




**சம்பூர் அனல் மின்நிலையத்திற்கு எதிராகப் பழங்குடி மக்களான வேடவ இன மக்களும் போராடுகின்றனர்**

இலங்கையின் அனைத்து இன மக்களும் இந்த அனல் மின் திட்டத்தை எதிர்க்கிறார்கள். ஆனால் இலங்கை மின்சார அமைச்சரோ “என்ன எதிர்ப்பு வந்தாலும் சம்பூரில் இந்திய அனல்மின் நிலையம் அமைத்தே தீருவோம்” என்று கூறியுள்ளார். அமைச்சர் மட்டுமன்றி தமிழ்த் தேசியகூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தர் அய்யாவும் இந்த அனல்மின் திட்டம் வந்தே தீரும் என்கிறார். சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே சம்பந்தன் அய்யா அவர்கள் தவறான நிலைப்பாட்டிலேயே உள்ளார். இந்தியா வராவிட்டால் சீனா வந்து விடும் என்று ஆரம்பத்திலிருந்தே அவர் கூறிக் கொண்டிருக் கிறார். மின்நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பல் சீனச் சாம்பலாக இருப்பதைவிட இந்தியச் சாம்பலாக இருப்பது மேலானது என்று சம்பந்தன் அய்யா நினைப்பது போல் தெரிகின்றது. ஆனால் சீனச் சாம்பலும் வேண்டாம் இந்தியச் சாம்பலும் வேண்டாம் என்பதே சம்பூர் மக்களின் நிலைப்பாடாகும்.

25.03.2016 அன்று சம்பூர் மகாவித்தியாலயத்தினை மக்களிடம் மீள வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட சம்பந்தன் அய்யா அவர்கள் "நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைக்கப்படு வதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் தான் இன்று அம்மின் நிலையத்தில் வேலை பார்ப்பதுடன் மிகவும் சந்தோசமாகவும் வாழ்கின்றார்கள்" எனக் கூறியிருந்தார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். உறுதிப்படுத்திய தகவல் களின்படி அப் பிரதேசத்தினைச் சேர்ந்த இருவர் மட்டும் அனல் மின் நிலையத்தில அதுவும் வாகனச் சாரதிகளாகவே பணியாற்றுகிறார்கள். அதேவேளை அனல் மின் நிலையத்தால் அந்த மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைக்கப்படுவதற்கு ஆரம்பம் முதலே அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார். மக்களின் எதிர்ப்பினையும் மீறி அனல்மின் நிலையம் கட்டப்பட்ட போது அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், இலவச மின்சார விநியோகம், பாடசாலைக்கு கட்டடம் அமைத்துத் தருதல், வீதி அமைத்துத் தருதல், மீன்பிடிக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் திட்டங்களை வகுத்தல் போன்ற பல உத்தரவாதங்கள் நுரைச்சோலை பகுதி மக்களுக்கு அதிகாரிகளால் வழங்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் இவை எவையுமே இன்றுவரை நிறை வேற்றப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பான சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் நிலக்கரி மற்றும் சாம்பல் கிராமங் களை நோக்கி பரவாமல் தடுப் பதற்கு பெரிய மரங்கள் நடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் - சம்பந்தரும், மாவை சேனாதிராசாவும்**

ஆனால் பல வருடங்கள் கடந்தும் மரங்கள் எவையும் இன்று வரை நடப்படவில்லை. காற்று கடலிலிருந்து தரைப்பகுதியினை நோக்கி வீசும் போது நிலக்கரியும் சாம்பலும் நிலப்பகுதியினை நோக்கி விசிறப்படுவதால் மக்களின் வாழ்வாதாரமும் ஆரோக்கியமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது மட்டுமன்றி நிலக்கரியினை எரிக்கும் போது உருவாகும் சாம்பல் சீமெந்து உற்பத்தி ஆலைகளுக்கு விற்கப்படும் என்று சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து உருவாகும் சாம்பல் சீமெந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருப்பதாகக் கூறி சீமெந்து ஆலைகள் சாம்பலினை வாங்க மறுத்து விட்டன. இதனாலேயே சாம்பல் அனல் மின் நிலையத்திற்கு அருகேயுள்ள பிரதேசத்தில் கொட்டப்படுகின்றது.

மேலும் சல்பர் வாயு, நைதரசன் வாயு, தூசுப் படிவுகள் போன்றவற்றின் தாக்கத்தினை கண்காணிப்பதற்காக கற்பிட்டியில் ஒரு கண்காணிப்பு நிலையத்தினையும் புத்தளம் நகரத்தினை அண்டிய பகுதிகளில் இரண்டு கண்காணிப்பு நிலையங்களையும் அமைக்க வேண்டும் எனவும் சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள போதும் அவ்வாறான நிலையங்கள் எதுவும் இன்றுவரை அமைக்கப்படவில்லை. இதன் மூலம் சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பது நிரூபணமாகின்றது. நுரைச் சோலை மக்களின் நிலை இப்படி இருக்கையில் அந்த மக்கள் மகிழ்வுடன் இருப்பதாக சம்பந்தர் அய்யா பொய் கூறுகிறார். அவருக்கு தமிழ் மக்களின் நலனைவிட இந்திய நலனே முக்கியமாக தெரிகிறது. மற்றுமொரு தமிழ் தலைவரான மாவை சேனாதிராசா அவர்கள் ஒரு தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தமிழ் மக்கள் ஒரு அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு இந்தியாவின் உதவி தேவையான படியால் இந்திய உதவியுடன் அமையப் போகும் சம்பூர் நிலக்கரி அனல் மின்நிலையத்தினை "தாங்கள் எதிர்க்க முடியாது" எனக் கூறுகின்றார்.

இந்தியா தமிழ் மக்களுக்கு சமஸ்டி பெற்றுத் தருவதாகவோ அல்லது வடகிழக்கை இணைத்துத் தருவதாகவோ இதுவரை எங்கேயும் கூறவில்லை. பதின்மூன்றாவது திருத்தச் சட்ட மூலத்தில் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களையும்கூட இந்தியா பெற்று தருவதாக இதுவரை கூறவில்லை. இந்திய அரசு சமஸ்டி தீர்வுக்கு ஒருபோதும் ஆதரவு அளிக்கவில்லை என்று முன்னாள் மாகாண முதலமைச்சர் வரதராஜபெருமாள் அண்மையில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் எப்போதோ வரப்போகும் தீர்வைக் காட்டி பத்து வருடமாக அகதி வாழ்க்கையினை அனுபவித்து விட்டு தற்போதுதான் தமது வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப முனையும் மக்களை மாவை சேனாதிராசா அதலபாதாளத்தில் தள்ளிவிட முனைகிறார். இன்றுவரை சம்பந்தர் அய்யாவும் மாவை சேனாதிராசா வும் மக்களைப் பெரியளவில் பாதிக்கக்கூடிய இத்திட்டம் பற்றி அப் பிரதேச மக்களிடமோ அல்லது சிவில் அமைப்புக்களுடனோ அல்லது துறைசார் நிபுணர்களிடமோ ஒரு விரிவான கலந்துரையாடல்களைச் செய்து முடிவெடுக்க முன்வராதமை தமிழ்மக்கள் குறித்து அவர்கள் கொண்டிருக்கும் அக்கறை பற்றி சந்தேகத்தை எழுப்புகிறது.

கிழக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை இந்த கனிம வளங்களை வெளியார் எவரும் சுரண்ட அவர்கள் அனுமதிக்கவில்லை. குறிப்பாக இல்மனைற் எடுக்க வந்த ஜப்பானிய கப்பல் ஒன்றைக்கூட அவர்கள் குண்டு வைத்துத் தகர்த்தார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு விரட்டப்பட்டதும் உடனடியாகவே கிழக்குமாகாணம் மகிந்த ராசபகசேவினால் இந்தியாவுக்கு தாரை வார்க்கப்பட்டுவிட்டது.

### கொடவாயா கனிம வளம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவின் சொந்தப் பிரதேசமான அம்பலாந்தோட்டையில் கொடவாயா என்ற இடம் உண்டு. இங்கு வளவ நதி மூலம் அடித்து வரப்பட்ட கனிம மணற்குவியல் உண்டு.

இந்த பெறுமதி மிக்க கனிமவளத்தையும் அகழ்வதற்கு இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மகிந்த இராஜபக்ச தமிழர் நிலத்தை மட்டுமல்ல தனது சொந்த பிரதேசத்தைக்கூட இந்தியாவுக்குக் கொடுத்துள்ளார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## கிரிகந்தை கனிம வளம்

அடுத்து கிரிகந்தை என்ற இடத்திலும் விசாலமான கனிம மணல் இருக்கிறது. அதனையும் அள்ளி எடுப்பதற்கு அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனம் ஒன்றிற்கே மகிந்த ராஜபக்சவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழர் பகுதியான புல்மோட்டை மட்டுமல்ல இலங்கையை சுற்றிவரவுள்ள கனிம வளங்களை எல்லாம் சுரண்டி எடுக்கும்உரிமை இப்போது இந்தியாவிடமே உள்ளது.

## கனிம வளங்களும் அதற்கான உரிமைகளும்

இலங்கையில் மண்ணுக்குள் பல்வேறு பெறுமதி மிக்க கனிம வளங்கள் புதைந்து இருக்கின்றன. அவற்றை கண்டு பிடிப்பதற்கு "கல்யாணி ஸ்டீல் கோபரேசன்" என்னும் இந்திய நிறுவனத்திற்கே கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கண்டுபிடிப்பதற்காக கண்டுபிடிக்கும் கனிம பொருளை அகழ்ந்தெடுக்கும் உரிமையும், அகழ்ந்து எடுக்கும் கனிமத்தில் பெரும்பகுதி இந்தியாவுக்கே விற்கப்படவேண்டும் என்ற நிபந்தனையையும் அந்த நிறுவனம் விதித்துள்ளது. இத்தகைய மோசடி மிக்க நிபந்தனைகளுக்கு இலங்கையின் மகிந்த இராஜபக்ச அரசே சம்மதம் தெரிவித்துள்ளது.

## மன்னார் எண்ணெய்வளம்

பொதுவாக எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் "டெண்டர்" விட்டு அதில் இருந்தே தெரிவு செய்வது வழக்கம். இதுதான் உலக நடைமுறை. ஆனால் அவ்விதமாக எந்தவித "டெண்டர்" கோரலும் இன்றி மன்னாரில் உள்ள எண்ணெய்வளம் இந்திய கெயான் நிறவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அகழ்ந் தெடுக்கப்படும் எண்ணெயில் 10 வீதம் மட்டுமே இலங்கைக்கு வழங்கப்படும். மீதி 90 வீதமும் இந்தியா எடுத்துச்சென்றுவிடும். இதைத் தவிர இலாபத்தில் 10 வீத வரி மட்டுமே இலங்கைக்கு வழங்கப்படும் என ஒப்பந்தம் தெரிவிக்கிறது. இந்த மோசடியான ஒப்பந்தத்தையும் மகிந்த இராஜபக்சவின் அரசே இந்தியாவுடன் செய்துள்ளது. தமிழ் மக்களின் நிலப்பகுதியான மன்னாரில் இருந்து எண்ணெய் வளத்தை மோசடியான ஒப்பந்தம் மூலம் இந்தியா பெற்றுக் கொள்ளவிருப்பதை தமிழ்மக்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை எந்தவித எதிர்ப்பையும் பதிவு செய்யவில்லை. மன்னார் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான "டெலோ" இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தன் குடும்பத்துடன் இந்தியாவில் வசித்து வருகிறார். அவருக்கு இந்தியாவில் கோடிக்கணக்கான சொத்துகள் இருக்கின்றன. எனவே மன்னார் எண்ணெய்வளம் இந்தியாவினால் கொள்ளையடிக் கப்படுவது குறித்து அவர் எதிர்ப்பு காட்டாமல் இருக்கிறார்.

### மோசடியான மின்சார ஒப்பந்தம்

அடுத்து இந்தியாவிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் சென்னையில் இருந்து தனுஸ்கோடி வரைக்கும் பின்னர் அங்கிருந்து தலைமன்னார் வரைக்கும் கடலுக்கடியிலான மின்சார “கேபிள்“ இணைப்பு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 200 கி.மீ வரை “கேபிள்“ அமைத்து அங்கிருந்து அநுராதபுரம், வவுனியா போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு 450 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மின்சாரக் “கேபிள்“ ஊடாக 1000 மெகாவாட் மின்சாரம் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது. இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் பெரும் மின்சாரப் பற்றாக்கறை நிலவும் இவ்வேளையில் இலங்கைக்கு 1000 மெகாவோட் மின்சாரம் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை தனது மின்சாரத் தேவையில் 40 வீதம் இந்தியாவில் தங்கியிருக்கும் நிலை உருவாகின்றது.

இலங்கையின் நலனுக்கு விரோதமான ஒரு திட்டத்தையும் கூட மகிந்த இராஜபக்சவின் அரசே இந்தியாவுடன் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்திய நிறுவனத்தால் சம்பூரில் அமைக்கப் படும் அனல்மின் நிலையத்தினூடாக 500 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என கூறப்படுகிறது. இந்த மின்சாரத்தை விநியோகிக்கும் உரிமை, பணம் அறவிடும் உரிமை யாவும் அந்த இந்திய நிறுவனத்திற்கு ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள சட்டப்படி இலங்கை மின்சாரசபை மட்டுமே மின்சாரத்தை விநியோகிக்க முடியும். அதனால் இந்திய நிறுவனத்திற் காக சட்டத்தையே மாற்றுவதற்கு மகிந்த இராஜபக்சவின் அரசு முனைந்தது. சம்பூரில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தின் அளவு 500 ல் இருந்து 1000 மெகாவோட்டாக அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அதிகரிக்கப்படும் மின்சாரம் இலங்கைக்கு வழங்கப்படாது என்றும் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும் கூறப்படுகிறது. ஒருபுறம் இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பின்பு கேபிள் வழியாக மீண்டும் இலங்கைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது. என்ன கேலிக்கூத்தான ஒப்பந்தம் இது? ஆனால் இதுதான் இந்திய அரசின் சூழ்ச்சித் திட்டம். அதாவது இலங்கையின் மின்சாரத் தேவையை தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதே அதன் திட்டமாகும். இப்படியான ஒரு கேலிக்கூத்தான ஒப்பந்தத்தை சீனாவின் ஆதரவாளர் (?) என்று கூறப்படும் மகிந்த இராஜபக்சவே செய்துள்ளார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

## எண்ணெய் விநியோகம்

எண்ணெய் அகழ்வு மட்டுமல்ல எண்ணெய் விநியோகமும் இந்தியாவின் கைகளுக்குத்தான் செல்கிறது. இலங்கையில் 207 எண்ணெய் விநியோக நிலையங்கள் இருக்கின்றன. இதில் 100 விநியோக நிலையங்களை இந்திய நிறுவனம் IOC வாங்கி உள்ளது. இவ் இந்திய விநியோக நிலையங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமே எண்ணெய் வாங்க வேண்டும் என முதலில் ஒப்பந்தம் போடப்பட்டது.

பின்னர் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு இந்தியாவிலிருந்து எண்ணெய் கொண்டுவர அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இந் நிறுவனம் திரிகோணமலையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவி வருகிறது. அது செயற்பட ஆரம்பிக்கும் போது இலங்கை அரசுக்கு சொந்தமான சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும் என தெரியவருகிறது. அவ்வாறு நிகழும் பட்சத்தில் இலங்கை பூராவும் எண்ணெய் விநியோகம் ஒரு இந்திய நிறுவனத்தையே சார்ந்து இருக்கும். இத்தகைய இலங்கையின் நலனுக்கு விரோதமான ஒப்பந்தத்தையும் மகிந்த இராஜபக்சவின் அரசே இந்தியாவுடன் மேற்கொண்டுள்ளது.

## காங்கேசன்துறை துறைமுகமும் சீமெந்து தொழிற்சாலையும்

யாழ்குடாநாட்டில் உள்ள காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையும் அதன் அருகில் இருக்கும் பாரிய சுண்ணாம்புப் பாறைகளும் இந்தியாவின் பிர்லா கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சுண்ணாம்புப் பாறைகளை அகழ்ந்து எடுத்துச் செல்வதற்கு வசதியாக காங்கேசந்துறை துறைமுகத்தை இந்தியா புனரமைப்பு செய்யவுள்ளது. இந்தியாவுக்கு இத் துறைமுகத்தை வழங்குவதன் மூலம் பல தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என இந்தியாவின் கைக்கூலிகளான மாவை சேனாதிராசாவும் சுமந்திரனும் கூறி வருகின்றனர். ஆனால் உண்மையில் இது காங்கேசன்துறை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் சீமெந்தையும் அதன் அருகில் தோண்டியெடுக்கப்படும் முருகை கற்களையும் கப்பல் மூலம் இந்தியா கொண்டு செல்வதற்கு வசதியாகவே இத் துறை முகத்தை இந்தியா புனரமைப்பு செய்யவுள்ளது.

சீமெந்து தொழிற்சாலைக்காக முருகைக்கற்களை தோண்டி எடுப்பதால் கடல் அரிப்பு ஏற்படுவதாகவும் இதனால் முழு யாழ்ப்பாணத் திற்கும் ஆபத்து ஏற்படும் என்றும் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் இலங்கை அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவர்கள் காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையை மூடும்படி கோரினார்கள். அது உண்மைதான்.

அதனால்தான் பல போராட்ட அமைப்புகள் பல தடவை காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையின் மீது தாக்குதல்கள் நடத்தி அதனை இயங்காமல் செய்தன. போராளிகளின் தாக்குதல் களினால் அது மூடப்பட்டது. ஆனால் இன்று இந்திய கம்பனிக்கு அந்த சீமெந்துத் தொழிற்சாலை வழங்கப்பட்டு அதன்மூலம் மீண்டும் யாழ்குடாநாட்டிற்கு ஆபத்து தோன்றியுள்ள வேளையில் அதே தமிழ் தலைவர்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவிப்பது தமிழ் மக்களுக்கும் அந்த மக்கள் வாழும் மண்ணுக்கும் அவர்கள் செய்யும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

## திக்கம் வடிசாலை

யாழ்ப்பாணம், வடமராட்சி, திக்கம் வடிசாலையையும் இந்திய தனியார்த்துறை நிறுவனமொன்றுக்கு விற்பதற்கு தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் இரகசியமான முறையில் நிதி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக செய்திகள் வருகின்றன. இந்த வடிசாலை விற்கப்பட்டால், வடமராட்சி சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைவர். இவர்களது உற்பத்திகளைப் புறக்கணித்துவிட்டு, இந்தியாவில் இருந்து செயற்கை மூலப் பொருட்களை தருவித்து சாராய உற்பத்திகள் மேற்கொள்ளப்பட அதிக வாய்ப்புகள் இருப்பதால், உள்ளூர் கள்ளை இந்திய நிறுவனம் நிராகரிக்கும். இந்திய நலனில் அக்கறைகொண்ட மாவை சேனாதிராசா திக்கம் வடிசாலையை விற்பதால் தமிழ் சீவல் தொழிலாளிகளே பெரும் பாதிப்பை அடையக்கூடும். எனவே இதனை தடுப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் முன்வருவது அவசியமாகும்.

## புகையிரதப் பாதை அமைக்கும் பணி

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும்கூட காலியில் இருந்து மாத்தறை வரையிலான புகையிரதப்பாதை அமைக்கும் பணி இந்தியாவிடமே வழங்கப்பட்டுள்ளது. டெண்டர் கோராமலே இந்தப் பணி இந்தியாவிடம் வழங்கப்பட்டுள்ளது.

## நீண்டகால குத்தகையில் வழங்கப்பட்ட விவசாய நிலம்

கிழக்குமாகாணத்தில் திரிகோணமலை மாவட்டத்தில் 675 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள நிலம் பொருளாதார வலயம் என்னும் பேரில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை அநுராத புரம், மதவாச்சி, வவுனியா போன்ற இடங்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் இந்திய பெரு முதலாளிகளுக்கு குறைந்த குத்தகையில் நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

## இந்திய இறக்குமதி

இலங்கை வர்த்தக சந்தையை எடுத்துக்கொண்டால் இந்தியப் பொருட்களே அங்கு நிறைந்து காணப்படுகின்றன. இலங்கையின் தொழிற்துறையில் பெருமளவு இந்தியாவின் கைவசமே இருக்கிறது. மோட்டார் சைக்கிள், ஆட்டோ, பேருந்து ஆகியன இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. தவிரவும் பெரும்பாலான மருந்து வகைகளும் இந்தியாவிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

## இந்திய மருத்துவமனைகள்

அப்பலோ மருத்துவமனை போன்ற இந்திய பெரு மருத்துவ மனைகளும் இலங்கையில் தமது கிளைகளை அமைத்துள்ளன. இந்த மருத்துவமனைகள் அதிக பணத்தை வசூலிப்பதுடன் சட்ட விரோத மோசடிகளிலும் ஈடுபடுகின்றன. இந்த மருத்துவமனைகளில் நடைபெற்ற சிறுநீரக மோசடி காரணமாக எட்டு இந்தியர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அந்த எட்டு இந்தியர்களும் மிரீகனாவில் அமைந்துள்ள வெளிநாட்டவர் தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அதில் இருந்து முதலாவது சந்தேகநபர் தப்பி சென்றுவிட்டதாக குற்றப்புலனாய்வுப் பொலிசார் நீதிமன்றத்தில் அண்மையில் தெரிவித்துள்ளனர்.

## தனியார் பல்கலைக்கழக அனுமதி

இந்திய தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளன. இதன்மூலம் இதுவரை இலங்கையில் இருந்து வந்துள்ள இலவசக் கல்விக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**மீனவர் பிரச்சனை**

இலங்கையின் பொருளாதாரத்தில் மீன்பிடித் தொழில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. வேலைவாய்ப்பும் வருமானமும் வழங்கும் துறை இது. ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியும் கிடைக்கிறது. மீன்பிடி சார்ந்த பல துணைத்தொழில்களும் உருவாக்கப் படுகின்றன. இலங்கையில் சுமார் 7 இலட்சம் மக்கள் மீன்பிடி துறைசார் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்கின்றார்கள். இலங்கையில் தேசிய மீன் உற்பத்தி 3,04,380 மெற்றிக் தொன்கள் (2014), அதில் நன்னீர் மீன் உற்பத்தி போக கடலில் இருந்து பெறப்படுவது 2,67,680 மெற்றிக் தொன்கள் (2014) ஆக இருக்கின்றது.

தமிழத் தேசியக் கூட்டமைப்பால் இனவாதக்கட்சி எனக் கூறப்படும் ஜே.வி.பியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் விஜிதகேரத் தமிழ் மீனவர்களுக்காகப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளார். ஒரு நாளைக்கு 1,500 இந்திய றோலர் படகுகள் இலங்கைக் கடலுக்குள் வருவதையும் அவை வருடமொன்றிற்கு 864 கோடி ரூபா பெறுமதியான கடல்வளங்களை சூறையாடுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் இலங்கை வடபகுதி தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுவதையும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

வடபகுதி தமிழ் மீனவர் சங்கத் தலைவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தர் அய்யாவிடம் தமது குறைகளை விளக்கி மனுக் கொடுத்துள்ளார். பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவரான சம்பந்தர் அய்யா அவர்கள் இதுவரை இந்த தமிழ் மீனவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. வடமாகாண சபையில் மீன்பிடித்துறை அமைச்ச ராக இருக்கும் தமிழரான டெனீஸ் வரன் அவர்கள் தமிழ் மீனவர் களின் அவலநிலைக்கு குரல் கொடுக்கவில்லை. மாறாக ISIS முஸ்லிம் பயங்கரவாதிகளை ஒடுக்கும்படி குரல் கொடுக்கிறார்.



**ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜிதகேரத்**

இந்த மீனவர் பிரச்சனை என்பது இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கு மாத்திரமின்றி இந்தியாவின் தமிழக மீனவர்களுக்கும் முக்கிய பிரச்சனையாகும். ஏனெனில் இதுவரை 600 க்கு மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஆனால் இலங்கை இந்திய அரசுகள் இந்த மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணாமல் இழுத்தடிக்கின்றன. இலங்கைத் தமிழ் மீனவர்கள் தமிழக மீனவர்களுடன் நேரிடையாக பேச்சுவார்த்தை நடத்தி இப் பிரச்சனையை தீர்க்க விரும்புகின்றார்கள். ஆனால் இந்திய அரசோ இவர்களுடைய சந்திப்பை நிகழவிடாமல் தடுத்து வருகின்றது. ஏனெனில் பெரிய ரோலர் முதலாளிகள் இப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டால் தமக்கு வருமானம் பாதிக்கும் என அஞ்சுகின்றனர். டி.ஆர் பாலு போன்ற இப் பெரு முதலாளிகள் இந்திய அரசு மற்றும் தமிழக அரசில் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தமது செல்வாக்கின் மூலம் தீர்வு ஏற்பட விடாமல் தடுக்கின்றனர். இவர்கள் இலங்கை கடலில் ஆக்கிரமிப்பதால் இவர்களுக்காக அப்பாவி ஏழை மீனவர்கள் சாகின்றனர். அல்லது கைது செய்யப்படுகின்றனர். இதுவரை ஒரு பெரிய ரோலர் முதலாளியும் சுட்டுக் கொல்லப்பட வில்லை அல்லது கைது செய்யப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

## எட்கா (ETCA) ஒப்பந்தம்

ஏற்கனவே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் இருக்கின்றன. அவற்றில் பல ஒப்பந்தங்கள் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. அவை குறித்து மக்களால் எந்த விபரங்களும் அறிய முடியாமல் உள்ளது. இந்நிலையில் "எட்கா" என்ற ஒரு ஒப்பந்தத்தை செய்யவுள்ளனர். இவ்வொப்பந்தம் ஏற்பட்டால் இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலமாகவே மாறிவிடும் அபாயம் உள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ச காலத்தில் "சீபா" என ஒரு இலங்கை இந்திய ஒப்பந்தம் கொண்டு வர முயற்சி செய்யப்பட்டது. மக்களின் கடும் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. அப்போது எதிர்க்கட்சி தலை-வராக இருந்த ரணில் விக்கிரமசங்க இது இலங்கையின் நலனுக்கு எதிரான ஒரு மோசமான ஒப்பந்தம் என்றும் இதனைக் கொண்டுவர ஒருபோதும் அனுமதியோம் எனக் கூறினார்.

ஆனால் அவர் இன்று ஆட்சிக்கு வந்ததும் அதனைவிட மோசமான "எட்கா" ஒப்பந்தத்தை ஏற்படுத்த முனைந்து வருகிறார். "எட்கா" என்று அழைப்பது இலங்கை இந்திய வர்த்தக மற்றும் தொழில்நுட்ப உடன்பாட்டு ஒப்பந்தத்தின் சுருக்கமாகும்.

**இலங்கை வர்த்தகத்தை இந்தியாவிடம் தாரைவார்க்கும்**

**ETCA ஒப்பந்தத்தை தோற்கடிப்போம்!**

**கௌரவ மதத்தலைவர்களே, அன்பார்ந்த தாய், தந்தையரே, சகோதர, சகோதரிகளே,**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கைச்சாத்திடவுள்ள எட்கா ஒப்பந்தம் தொடர்பாக நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பீர்கள். "எட்கா" என்று அழைப்பது இந்திய-இலங்கை வர்த்தக மற்றும் தொழில்நுட்ப உடன்பாட்டு உடன்படிக்கையின் சுருக்கமாகும். இவ் ஒப்பந்தத்தின் இறுதி வரைபை இன்னமும் வெளியிடாவிட்டாலும் இவ்வருடம் ஆரம்பத்திலிருந்து அரசாங்கத்தின் தலையீட்டில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது. இதற்கேற்ப, ஒப்பந்தத்தின் தேவையான அடிப்படை உடன்பாடு நிறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ் ஒப்பந்தத்திற்கு எதிராக பல்வேறு துறையினரின் எதிர்ப்பை கருத்தில் கொள்ளாமல் அரசு முன்னோக்கி நகர்கின்றதை காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தை எடுத்துக்கொண்டால், உலகில் எந்த நாட்டுக்கும் தனிமையாக இருக்க முடியாது. தொழில்நுட்பம், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்ப துறைகளை உற்பத்தித் துறையினால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இரு நாடுகளுக்கிடையேயும், பல நாடுகளுக்கிடையேயும் கைச்சாத்திடும் ஒப்பந்தங்களில் உரிய நாடுகளுக்கு முதலீடுகள், அந்தந்த நாடுகளில் காணப்படாத தொழில்நுட்பத்தை வரவழைத்துக் கொள்வதற்கு ஏதுவாக அமைய வேண்டும். அதேபோன்று எமது நாட்டு உற்பத்திகளை வெளிநாடுகளில் இடத்தை பிடித்துக் கொள்வதற்காகவும் ஒப்பந்தங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே இவ்வாறான ஒப்பந்தங்களினால் இருநாடுகளுக்கும் சமனான பயன்கள் கிடைக்க வேண்டும். அதனால் நாடுகளுக்கிடையே கைச்சாதிடும் எல்லா ஒப்பந்தங்களையும் எதிர்க்கும் கொள்கை தவறு என்பதோடு உரிய ஒப்பந்தங்களின் உள்ளடக்கம், குறிப்பாக அது எமது நாட்டுக்கு சாதகமா, பாதகமா என்பதை ஆராய வேண்டியுள்ளது.

எட்கா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி வெளியிட்ட பிரசுரம்

1998இல் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஒரு சுயாதீன ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது. அது கடந்த 16 வருடங்களாக நடை முறையில் உள்ளது. இந்தியா ஒரு பெரிய சந்தை. இலங்கை ஒரு சிறிய சந்தை. இலங்கையின் நாளாந்த சந்தை 30 லட்சம் ஆகும். அதே வேளை இந்தியாவின் நாளாந்த சந்தை 30 கோடியாகும். ஆகவே இந்த ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு பெரிய பயன்மிக்க சந்தை கிடைக்கும் எனக் கூறப்பட்டது. இவ்வாறு கூறி மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்டது.

2000ம் ஆண்டில் இலங்கை இந்திய வர்த்தக பெறுமதி 650 மில்லியன் டொலர் ஆகும். ஒப்பந்தத்தின் பின்னர் 2014 இல் இந்த வர்த்தக பெறுமதி 4,600 மில்லியன் டொலர்களாக ஆகியது.

இதில் இலங்கையின் பங்கு 625 மில்லியன் டொலர். மீதி இந்தியாவினது ஆகும். அதாவது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதியான பொருட்கள் 3,950 மில்லியன் டொலர் ஆகும். ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு பயன் கிடைக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால் அதிக பயனை இந்தியாவே பெற்று வருகிறது. ஒப்பந்தம் மூலம் சமச்சீர் அற்ற வர்த்தகம் நடைபெறுகிறது.

ஒப்பந்தத்தில் இந்தியா சில வரிச்சலுகைகளை அளித்திருந்த போதிலும் இலங்கையினால் அதன் பயனைப் பெற முடியவில்லை. அதற்கு காரணம் இந்தியா வேறுவிதமான நடைமுறைகளைப் பின்பற்றுவதாகும். குறிப்பாக இந்திய அரசியல் நிர்ணய சட்டப்படி அதன் பிராந்திய அரசுகள் சுயாதீனமாக வரி விதிப்புகளை செய்வதாகும். உதாரணமாக தமிழ்நாடு அரசு பொருள் இறக்குமதியின்போது 21% வரியை விதிக்கின்றனது. அதனால் இந்திய அரசு வரிச்சலுகை அளிந்திருந்தபோதிலும் இலங்கைப் பொருட்களை தமிழ்நாட்டில் இறக்குமதி செய்து விற்பனை செய்ய முடியாது. அதேபோன்று இலங்கையின் முக்கிய எற்றுமதிப் பொருளான தேயிலையும் இந்திய சந்தையில் விற்க முடியாத நிலை உள்ளது. இலங்கை தேயிலை இந்திய தேயிலையைவிட உயர்ந்த ரகமாயினும் இந்திய சந்தையை அடைய முடியவில்லை. ஏனெனில் கொச்சின், கல்கத்தா ஆகிய துறைமுகங்களுக்கு மாத்திரமே தேயிலை இறக்குமதி செய்ய இந்திய அரசு அனுமதித்துள்ளது. ஆனால் அந்த பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி செய்கின்றபடியால் இலங்கை தேயிலையை இறக்குமதி செய்வதை அப் பிரதேச மக்கள் எதிர்க் கின்றனர். இதனால் இலங்கையினால் இந்திய சந்தையில் தேயிலையை விற்க முடியாமல் உள்ளது. இவ்வாறான காரணங் களினால் ஒப்பந்தத்தினால் எதிர்பார்த்த நன்மைகள் இலங்கைக்கு கிடைக்கவில்லை. மாறாக இந்தியா இலங்கை சந்தையை ஆக்கிரமித்தது மாத்திரமே நடைபெற்றது.

இலங்கைக்கு தொலைவில் உள்ள நாடு அமெரிக்கா. அமெரிக்காவுடன் இலங்கை எந்த வர்த்தக ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. ஆனால் இலங்கையின் எற்றுமதியில் 25% அமெரிக்காவுடனேயே நடைபெறுகிறது.

அதேபோல் இங்கிலாந்தும் இலங்கைக்கு தொலைவில் உள்ள ஒரு நாடாகும். அதனுடனும் இலங்கை எந்த வர்த்தக ஒப்பந்தமும் செய்யவில்லை. ஆனால் இலங்கையின் ஏற்றுமதியில் 10% இங்கிலாந்துடனேயே நடைபெறுகிறது. இவ்வாறு எவ்வித ஒப்பந்தமும் இன்றி தொலைவில் உள்ள நாடுகளுடன் இலங்கையின் முக்கிய வர்த்தகம் நடைபெறுகிறது. ஆனால் இலங்கையின் அயல்நாடான இந்தியாவுடன் ஒப்பந்தத்துடன் 6% ஏற்றுமதியே நடைபெறுகிறது. எனவே உண்மையில் இலங்கைக்கு பாதிப்பான இந்த ஒப்பந்தம் நீக்கப்பட வேண்டும். அல்லது திருத்தப்பட வேண்டும். ஆனால் இலங்கை அரசு இதைவிட மோசமான "எட்கா" ஒப்பந்தத்தை மேற்கொள்ள முனைகிறது.

இதற்கிடையே சேவைத்துறையையும் உள்ளடக்கும் வகையில் புதிய "எட்கா" ஒப்பந்தத்தில் செய்ய முயலுகின்றனர். அன்று சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் ஒப்பந்தத்தின் மூலம் பெரும் நன்மைகள் இலங்கைக்கு கிடைக்கும் என்றார். இன்று ரணில் விக்கிரமசிங்கவும் "எட்கா" பற்றி அதையே கூறுகிறார். கடந்தகால அனுபவத்தின்படி ஒப்பந்தம் இந்தியாவிற்கு இலங்கைச் சந்தையை கைப்பற்ற வாய்ப்பு தந்த அதேவேளை இலங்கை முன்னர் இருந்த சந்தையையும் இழந்திருப்பது தெளிவாகின்றது.

இந் நிலையில் புதிய "எட்கா" ஒப்பந்தத்தில் ஒரு சேவை ஒப்பந்தத்தையும் செய்வதற்கு முயல்கின்றனர். இது இலங்கைக்கு பாரிய அழிவையும் நெருக்கடியையும் எதிர்காலத்தில் தோற்றுவிக்கப் போகிறது. இந்தியாவின் உழைப்போர் ஆளனி 50 கோடியாகும். இலங்கையின் உழைப்போர் ஆளனி 80 இலட்சம் ஆகும். இந்திய அரசின் தரவுகளின்படி இந்தியாவில் 7% தொழில் அற்றோர். அதாவது 3.70 கோடி மக்கள் தொழில் அற்று இருக்கின்றனர். இது இலங்கையின் சனத்தொகை போன்று இரண்டு மடங்கு ஆகும். இந்தியாவில் வருடாந்தம் 30 லட்சம் பட்டதாரிகள் உருவாகின்றனர். ஆனால் 1940இலிருந்து இன்றுவரை இலங்கையில் உருவாகிய பட்டதாரிகளின் எண்ணிக்கை இதனிலும் குறைவானது. எனவே இந் நிலையில் இலங்கையின் வேலைவாய்ப்புகளை இந்தியர்களுக்கு திறந்துவிட்டால் என்னவாகும்?

ஒரு இந்திய பத்திரிகையில் வெளிவந்த தகவலின்படி அண்மையில் 365 தபால் பியோன் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது 23 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 1 லட்சத்து 16 ஆயிரம் பேர் பட்டதாரிகள். 29 ஆயிரம் பேர் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள். 250 பேர் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள். ஆனால் அவ் வேலைக்கு கோரிய தகைமை எழுத வாசிக்கவும், சயிக்கிள் ஓடவும் தெரிந்திருத்தால் போதுமானது. இதன்படி இந்தியா எந்தளவு தொழில் அற்றோர் உள்ள நாடு என்பது தெளிவாகின்றது.

தகவல் தொழில்நுட்ப துறையில் இந்தியா மிகவும் முன்னேறியுள்ளது என்பது உண்மைதான். அமெரிக்க, பிரித்தானிய அவுஸ்ரேலிய நாட்டு தகவல் தொழில்நுட்ப கம்பனிகளில் உயர் பதவிகளில் இந்தியர்களே தொழில் பார்க்கின்றனர். ஆகவே எமது நாட்டின் தகவல் தொழில் நுட்ப(IT) துறையின் மேம்பாட்டிற்கும் இந்தியாவின் உதவியைப் பெறவேண்டும் என்பதும் சரிதான். ஆனால் இந்தியாவுடன் சேவை ஒப்பந்தம் செய்தாலும் இப் பிரிவினர் இலங்கைக்குள் வரமாட்டார்கள். ஏனெனில் வெளிநாட்டிற்கு தொழிலுக்காக செல்பவர்கள் எதிர்பார்க்கும் சில விடயங்கள் உண்டு. ஒன்று அதிக சம்பளம். இரண்டு பிள்ளை களின் கல்வி. மூன்று சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவை. நான்கு சுதந்திரம்.

இலங்கையின் கல்வி இந்தியாவின் கல்வியை விட சிறந்த நிலையில் இல்லை. எனவே எந்த இந்தியர்கள் பிள்ளைகளின் கல்விக்காக இலங்கை வருவார்கள்?


இலங்கையின் சுகாதார மற்றும் மருத்தவ சேவை சிறந்தது என்று கூறமுடியாது. இலங்கையின் சுகாதார அமைச்சரே தனது சிகிச்சைக்கு சிங்கப்பூர் மருத்துமனைக்கு செல்கிறார். எனவே எந்த இந்தியர் சுகாதார மற்றும் மருத்துவத்திற்காக இலங்கை வருவார்கள்?

இலங்கையின் சுதந்திரமும் பாராட்டும் படியாகவோ இந்தியாவைவிட சிறந்ததாகவோ இல்லை. எனவே எந்த இந்தியர்கள் சுதந்திரத்திற்காக இலங்கை வர விரும்புவார்கள்?

ஆகவே உயர் தகவல் தொழில் நுட்பத் தகைமை உள்ள இந்தியர்கள் இலங்கைக்கு வர விரும்ப மாட்டார்கள். அவர்கள் எப்போதும் மேற்கத்திய நாடுகளுக்கு செல்லவே விரும்புவார்கள். எனவே இலங்கைக்கு வரக்கூடியவர்கள் மத்திய தரத்தவர்களே.

அவர்களுக்கு இந்தியாவில் தொழில் உள்ளது. எனவே அவர்களும் இலங்கைக்கு வரப்போவதில்லை. அப்படியானால் இலங்கைக்கு வருபவர்கள் கீழ் மட்டத் தகமை உள்ளவர்களே. அவர்கள் இலங்கைக்கு வரும்போது இலங்கையர்களுடன் சம்பளம் பற்றி பேரம் பேசுவர். அவர்கள் குறைந்த சம்பளத்திற்கு தொழில் புரிய முனைவார்கள். இதனால் இலங்கையர்கள் பெறும் சம்பளங்கள் குறையும் அல்லது அதிக சம்பளம் பெறமுடியாத சூழ்நிலை உருவாகும். இதனால் இலங்கையில் உள்ள திறமைசாலிகள் நாட்டை விட்டு வெளியேற முனைவார்கள். ஆகவே இந்த ஒப்பந்தம் மூளைசாலிகளின் வெளியேற்றத்திற்கும் காரணமாக அமையப் போகிறது.

ஒப்பந்தம் மூலம் இந்திய மூலதனம் இலங்கையில் ஊடுருவுகிறது. அதை இலங்கையின் ஆளும் வர்க்கம் இருகரம் நீட்டி வரவேற்கின்றது. இது ஆங்கிலேய காலனித்துவ காலத்தைவிட அதிகளவில் இலங்கை மக்களை சுரண்டுகிறது.



**இந்தியப் பிரதமர் மோடி மற்றும்**
**இலங்கைப் பிரதமர் இரணில் விக்கிரமசிங்க**


# இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்துவதே தனது கொள்கையாக இந்தியா கொண்டிருக்கிறது. அது இலங்கையில் கால்பதிக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. முதன் முதலாக 1971ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்க இராணுவரீதியில் இந்தியா தலையிட்டது. 2,000 இந்திய இராணுவ வீரர்கள் வந்து அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசுக்கு உதவி புரிந்தார்கள். அவர்கள் கெலிகொப்டர் மூலம் குண்டு வீசி 6,000 இற்கு மேற்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களைக் கொன்று குவித்தார்கள். ஜே.வி.பி கிளர்ச்சியை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கிய இலங்கை இராணுவத்திற்கு இந்திய இராணுவ வருகையும் அவர்களது ஜே.வி.பி.க்கு எதிரான தாக்குதலும் பெரிதும் உதவிகரமாக அமைந்தது. இந்திய இராணுவம் இலங்கை அரசுக்கு உதவியிருக்கா விடின் ஜே.வி.பி.யினர் இலங்கையை கைப்பற்றியிருப்பார்கள் என்றே அன்று பேசப்பட்டது.

1983இல் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தை இந்தியா அதன் பிராந்திய மேலாதிக்க கொள்கையை நடைமுறைப்படுத்த தனக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டது. தமிழர்களுக்கு உதவி செய்வது என்ற போர்வையில் தன் கொடிய கரங்களை இலங்கை நோக்கி நீட்டியது. 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் தமிழ் போராளிகளுக்கு இந்தியா பயிற்சி வழங்கியது. இந்திய உளவுப்படையின் மூலம் ஆயுதம் வழங்கியது. ஆயுதம் வேண்டும் என்றால் அப்பாவி சிங்கள மக்களைக் கொல்லும் படி இந்திய உளவுப்படை வற்புறுத்தியது. பின்னர் போராளி அமைப்பு களுக்கிடையே சகோதரப் படுகொலைகளை அது உருவாக்கியது. இவ்வாறு தமிழக, சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே போராளிகளுக்கு இருந்த நல்ல மதிப்பை அது திட்டமிட்டுக் கெடுத்தது.

1987ஆம் ஆண்டளவில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து அமைதிப்படை என்ற பெயரில் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது. தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக வந்ததாக கூறப்பட்ட இந்திய இராணுவம் தமிழ் மக்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தது. அவர்களது உடமைகளை சேதப்படுத்தியது. பல நூற்றுக்கணக்கான தமிழ் பெண்களைப் பாலியல் வல்லுறவு செய்தது. இந்திய இராணுவத்தோடு ஒப்பிடுகையில் இலங்கை இராணுவம் மேல் என்று நினைக்கும் அளவிற்கு மிகவும் குறுகிய காலத்தில் அது மிகப்பெரிய அழிவுகளை மேற் கொண்டது. "600 இற்கு மேற்பட்ட தமிழ் பெண்களை இந்திய இராணுவத்தினர் பாலியல் வல்லுறவு செய்தனர். 79 வயது மூதாட்டியைக்கூட அவர்கள் பாலியல் வல்லுறவு செய்துள்ளனர்" என்று அப்போது பிரதமராக இருந்த பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித் திருந்தார்.

8,000 இற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களையும் 500 இற்கும் மேற்பட்ட போராளிகளையும் 1,200இற்கும் மேற்பட்ட இந்திய ராணுவ வீரர்களையும் பலியிட்டு சுமார் 5,400 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தை செலவு செய்து இரண்டரை வருடங்களாக நடத்திய இந்த யுத்தத்தால் இந்திய இராஜீவ் அரசுக்கு என்ன ஆதாயம் என்ற கேள்விக்கு இராஜீவின் ஊழல் இரகசியங் களை திசை திருப்பவே இந்த யுத்தம் என்றார்கள் சிலர். இராஜீவ் ஆலோசகர்கள் சிலர் தரும் தவறான தகவல்களே காரணம் என்றார்கள் இன்னும் சிலர். ஜெயவர்த்தனாவின் சாதுரியமான சூழ்ச்சியே காரணம் என்றார்கள் வேறு சிலர். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரு முக்கியமான விடயத்தை மறந்து விட்டார்கள் அல்லது மறைத்து விட்டார்கள். இந்திய ஆட்சியாளர்களின் ஆதிக்க விஸ்தரிப்புவாத நலன்களும், பிராந்திய மேலாதிக்க நலன் களும் தான் இந்த கொடிய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் தீர்மானகரமான பின்னணி என்ற விடயம்தான் அது.



**இராஜீவ் காந்தியால் அனுப்பப்பட்ட இந்திய ஆக்கிரமிப்புப் படை இலங்கை மக்களால் விரட்டியடிக்கப்பட்டது.**

1965இல் பாகிஸ்தான் மீது இந்தியா தொடுத்த போர் 22 நாட்கள் நடைபெற்றது. பின்னர் 1971இல் வங்கதேசத்தை உருவாக்க நடத்திய போர் 14 நாட்கள் நடைபெற்றது. ஆனால் 1987இல் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் வீரர்களுடன் இலங்கை வந்த இந்திய ராணுவம் இரண்டரை வருடங்களுக்கு மேலாக போர் நடத்தியது. இந்த நீண்ட போரின் மூலம் தென்கிழக்காசியாவின் உள்விவகாரங்களை தீர்த்துவைக்கும் மத்தியஸ்தன் என்கிற அரசியல் பாத்திரத்தையும் இப் பிராந்திய வல்லரசு என்கிற இராணுவ அரசியல் பாத்திரத்தையும் இந்தியா நிலை நிறுத்திக்கொண்டது.

இந்தியப் படைகள் இலங்கையில் இருந்த வேளை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு "இந்தியப் படைகள் இலங்கையில் தங்கியிருப்பதென்பது இந்தியாவின் அயலுறவுக் கொள்கைக்கு ஏராளமான பயன் விளைவிக்கக் கூடியதாகும். இதன் மூலம் இந்தியா ஓர் பிராந்திய வல்லரசாக இறுதியாகவும் உறுதியாகவும் பரிண மித்துள்ளது. இந்தியாவின் பிராந்திய மற்றும் சர்வதேசிய அரசியலாசை நிறைவேற்றத்தில் இது ஓர் திருப்புமுனை" என்று தெரிவித்தது. இந்திய இராணுவத் தளபதி "மயிர்க் கூச்செறியும் ஓர் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பிராந்தியத்தின் வரலாற்றை மாற்றும் செயலில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட அடுத்த சில மணி நேரங்களிலேயே அமெரிக்கா வெளிப்படையாக வரவேற்று ஆதரித்தது. டில்லியில் இருந்த அமெரிக்க தூதர் "இந்தியாவுக்கு வயது வந்துவிட்டது. இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசு எடுத்த நிலைப்பாட்டால் அது தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக மாற்றிக் கொண்டுவிட்டது. அமெரிக்க அரசு இந்திய அரசின் இந் நிலைப் பாட்டை முழு மூச்சாக ஆதரிக்கிறது" என்றார். இரஷ்யா முதலில் சற்று தயங்கினாலும் பின்னர் அதுவும் ஒப்பந்தத்தை ஆதரித்து கருத்து வெளியிட்டது. சீனா கூட ஒப்பந்தத்தை கண்டிப்பதற்கோ இந்திய அரசின் இராணுவ தலையீட்டை எதிர்ப்பதற்கோ முன்னுரிமை கொடுக்கவில்லை. பாகிஸ்தான் ஒப்பந்தம் குறித்து மூச்சு விடவில்லை. காமன்வெல்த் நாடுகளும் ஐரோப்பிய பொருளாதார சமூகமும் ஒப்பந்தத்தை ஆதரித்து இந்திய அரசின் தலையீட்டிற்கு அங்கீகாரம் வழங்கின.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நேபாள அரசு விமர்சித்த போது "பக்கச் சார்பு எடுக்க வேண்டாம்" என இந்தியா மிரட்டியது. நேபாளம் சீனாவிடமிருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகளை கொள்வனவு செய்ய முயன்ற வேளை "இனி மேல் சகித்துக் கொள்ள முடியாது" எனவும் இந்தியா எச்சரிக்கை செய்தது. நிதி அறிக்கையில் 17 சதவிகிதத் திற்கு மேல் இராணுவத்திற்கு ஒதுக்கும் இந்தியா, ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை வல்லரசுகளிடமிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்காக செலவிடும் இந்தியா, அருகில் உள்ள சின்னஞ் சிறு நாடான நேபாளத்தை இவ்வாறு பயமுறுத்துகிறது. இந்தியா நேபாளத்தை மட்டுமல்ல தனது பெரிய எதிரி நாடான பாகிஸ்தானையும் அது மிரட்டியது. "ஒரு இலட்சம் படை வீரர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுவிட்டனரே என வாலாட்ட முயற்சிக்க வேண்டாம். எல்லையில் எவ்வித மிரட்டலையும் சமாளிக்க இந்தியா தயாராக இருக்கிறது" என்று இந்திய இராணுவத் தளபதி எச்சரிக்கை செய்தார். நோபளம், பாகிஸ்தான் போன்ற அயல் நாடுகளுக்கு விடுத்த மிரட்டல்களில் இருந்து இந்தியா இலங்கையில் மேற்கொண்ட ஆக்கிரமிப்பானது நன்கு திட்டமிட்ட ஒரு செயல் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்தியா மேற் கொண்ட பிராந்திய மேலாண்மையை இந்திய ஆளும் வர்க்கங்கள் முழுமையாக வரவேற்று ஏற்றுக் கொண்டுள்ளன. பாரதீய ஜனதா முதல் இடது வலது (திரிபுவாத) கம்யனிஸ்டுகள் வரை தமிழ் மக்களின் ஒப்புதல் இன்றி ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கான இந்தியாவின் தகுதியை யாரும் கேள்வி கேட்கவில்லை. "உள்நாட்டில் தேசிய இன ஒடுக்குமுறை. வெளியில் விஸ்தரிப்பு" என்கிற இந்திய பிராந்திய வல்லரசுக் கோட்பாட்டை இந்தியத் தரகு முதலாளிய சக்திகள் அனைத்தும் ஒரே குரலில் ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது. புரட்கரச் சக்திகளையும் ஓரிரு ஜனநாயகக் குரல்களையும் தவிர அனைத்து கட்சிகளும் இந்திய ஆக்கிரமிப்பையும் அதன் இராணுவ தலையீட்டையும் அங்கீகரித் துள்ளன. தரகு முதலாளிய சக்திகள் அனைத்தும் ஒத்த குரலில் இத்தகைய ஆதரவு நிலைப்பாட்டை எடுப்பதை விளங்கிக் கொள்ள ஒப்பந்தம் மூலம் இந்தியா பெற்றுக் கொள்ளும் அரசியல், இராணுவ, பொருளாதார நலன்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. **அரசியல், இராணுவ நலன்கள்**

(அ) இலங்கையின் வெளி உறவுகளில் கட்டுப்பாடு செலுத்தும் உரிமை

(ஆ) ஒலி, ஒளிபரப்புகளை கட்டுப்படுத்தும் உரிமை

(இ) திரிகோணமலை தளத்தின்மீது கட்டுப்பாடு. இந்தியாவின் நலனுக்கு எதிரான அந்நியப் படைகள் எதனையும் அனுமதிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு

(ஈ) இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் உரிமை

(உ) இலங்கை இராணுவம் மீதும் இதர நாடுகளுடனான இராணுவ உறவுகள் மீதும் கட்டுப்பாடு

2. **பொருளாதார நலன்கள்**

(அ) இந்திய பொருட்களின் ஏற்றுமதிக்கான தடைகள் நீக்கப்படும்

(ஆ) திரிகோணமலை எண்ணெய்க் குதப் பணி ஒப்பந்தம் புத்துயிர்ப்பு செய்யப்படும். இதன் செயல்பாடுகளிலும் இலாபத்திலும் இந்தியாவிற்கு கட்டுப்பாடு.

(இ) சுமார் 400 கோடி ரூபா அளவிலான நிர்மாணப் பணிகள் இந்தியாவிற்கு வழங்கப்படும்.

(ஈ) மீன்பிடி, எண்ணெய் ஆய்வு, ஆற்றல் துறை ஆகியவற்றில் இந்தியாவுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்

(உ) இலங்கை திட்டக்குழு மற்றும் உயர் வங்கி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் உரிமை மூலம் இலங்கை பொருளாதாரத் திட்ட வகுப்பில் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு

(ஊ) உதவி என்கிற அடிப்படையில் இந்திய இரயில் பெட்டிகள் மற்றும் 'அசோக் லேலண்டு' பேருந்துகள் ஏற்றுமதி செய்தல்.

இவ்வாறு இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனைவிட இந்திய நலனையே அதிகம் கொண்டிருந்தமையினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 'ஒப்பந்தம் ஒரு அடிமைச் சாசனம்' என்றும் 'அதன் மூலம் வந்த இந்திய அமைதிப்படை ஒரு ஆக்கிரமிப்பு படை' என்றும் அறிவித்தார்கள். அத்தோடு 'கடைசி இந்திய இராணுவ வீரனையும் வெளியேற்றும்வரை தமது யுத்தம் ஓயாது' என்றும் கூறினார்கள்.

இலங்கை நாட்டின் உள்விவகாரங்களுள் ஆணவத்துடன் தலையை நீட்டிய இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் சர்வதேச நியதிகளை மீறிய கீழ்த்தரமான போரை தமிழ் மக்கள் மீது நடத்தினார்கள். யாழ்ப்பாணத்தில் 10 தமிழருக்கு 1 இந்திய இராணுவ வீரர் என்ற விகிதத்தில் படைகளைக் குவித்த பிறகும் கூட தமிழ் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை இவ் ஆக்கிரமிப்பாளர்களால் நசுக்க முடிய வில்லை. 'இரண்டு நாளில் முடிவு கட்டுவோம்' என்று கூறி யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் இரண்டு வருடமாகியும் முடிவு காண முடியாமல் தவித்தார்கள். 'ஒரு தேசிய இனத்தை அதன் சொந்த மண்ணில் எந்தவொரு வல்லரசாலும் தோற்கடிக்க முடியாது' என்ற வரலாற்று உண்மையை தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் மூலம் நிரூபித்தார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் மேற்கொண்ட காலகட்டத்தில் இந்தியாவில் வரலாறு காணாத வறட்சி நிலவியது. வறட்சியால் தானிய உற்பத்தி 2.7 கோடி டன் குறைந்திருந்தது. வறட்சியை சமாளிக்க இந்திய அரசுக்கு மேலதிகமாக 2,500 கோடி ரூபா தேவைப்பட்டது. ஒரிசா மாநிலத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் பட்டினியால் செத்தனர். கர்நாடக, ஆந்திரா மாநிலங்களிலும் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். விலைவாசி 14 சதவிகிதம் அதிகரித்திருந்தது. பண வீக்கம் பத்து சத விகிதத்தை தாண்டியிருந்தது. இந்த சூழலில் தான் அமைதிப்படைக்கு தினந்தோறும் ஆறு கோடி ரூபாய்கள் அதாவது மாதம் ஒன்றிற்கு 180 கோடி ரூபா வீதம் இரண்டரை வருடங்களாக மொத்தம் 5,400 கோடி ரூபாவை இந்திய அரசு செலவு செய்தது. இது பற்றி இந்திய அரசோ அல்லது இந்திய எதிர்க்கட்சிகளோ கவலை கொள்ளவில்லை. ஏகாதிபத்தியங்களின் ஆசியோடு பிராந்திய வல்லரசாக இந்தியா மாறியிருப்பதன் விளைவாக முதற்கட்டமாக பலியாகி இருப்பவர்கள் இலங்கை மக்கள். அடுத்தது இந்திய மக்கள். மாபெரும் வறட்சி, பட்டினிச்சாவுகள், விலைவாசி ஏற்றம் போன்ற இந்திய மக்களின் துன்பங்களை இலங்கை மீதான ஆக்கிரமிப்பு இரட்டிப்பாக்கியுள்ளன. இதனால் இந்திய மக்கள் மீது மேலதிக சுமை ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கை ஆக்கிரமிப்பின் மூலம் இந்திய அரசு தன்னை 'தெற்காசியாவின் பொலிஸ்காரனாக' நியமித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பெருமைக்காகவும் இதனால் கிடைக்கும் ஆதாயங்களுக் காகவும் இந்திய அரசு இன்னும் ஆயிரக்கணக்கானோரை கொலை செய்யவும் கோடிக் கணக்கான ரூபாவைச் செலவழிக்கவும் தயாராக இருக்கிறது. இந்திய நாட்டில் ஏராளமாக கொள்ளையடிக்கும் அமெரிக்க மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கும் இது முழுத் திருப்தியே. தென்னாசியாவில் வெளிப்பட்டிருக்கும் இந்திய மேலாண்மையினால் பயனடையப் போகிறவர்கள் மூன்றாம் உலக நாடுகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டுள்ள ஏகாதிபத்தியங்களும் அவற்றின் ஏஜென்டுகளாக விளங்கும் உள்நாட்டு தரகு முதலாளிவர்க்கமும் மட்டுமே. இதனால் மகத்தான இழப்புக்குள்ளாகியிருப்பவர்கள் தென் ஆசிய மக்களே.

## முள்ளிவாய்க்கால் அவலம்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கு மான இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் கடைசி இரு தினங்களில் மட்டும் நாற்பதாயிரம் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா அறிக்கை கூறுகிறது. போரின் பேரால் இலங்கை அரசு மேற்கொண்ட இவ் இனப் படுகொலையில் இந்திய அரசுக்கும் பங்கு உண்டு என மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றம் சாட்டியுள்ளார். இறுதி யுத்தத்தில் இந்தியா நேரடியாக தலையீடு நடத்தியது என்றும் தமிழர்களை அழித்து ஒழித்துவிட்டு ஆறு ஆண்டுகளாகியும் இந்தியா மௌனத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்திய மத்திய அரசின் பிரணாப் முகர்ஜி, நம்பியார், சிவசங்கர் மேனன் ஆகியோரின் திட்டத்திற்கு அமைய கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழியே சரணடையுமாறு தொலைபேசியில் 16.05.2009 அன்று கூறிய தாகவும் அதற்கு உயிரோடு இருக்கும் நேரடியான சாட்சி தானே என்றும் ஆனந்தி கூறியுள்ளார். கனிமொழி ஆனந்தியின் 'இந்தக் குற்றச்சாட்டை ஆதாரமற்றது' என்று கூறி நிராகரித்ததோடு, 'ஆனந்தி யார் என்று தனக்கு தெரியாது!' என்றும் கிண்டலாக பதில் அளித்துள்ளார்.

ஆனால் அதேவேளை 'ஈழத் தமிழர் மீதான இப்படுகொலையில் இந்தியாவும் பங்குபற்றியிருக்கிறது' என்றும் 'எனவே இந்தியாவும் அதற்காக விசாரிக்கப்பட வேண்டும்' என சர்வதேச நிபுணர் குழு தெரிவித்துள்ளது. நிபுணர் குழுவில் இவ்வாறான தீர்ப்பு அளித்தவர்களின் பெயரும் அவர்கள் பற்றிய விபரமும் வருமாறு,



**தமிழ் இன அழிப்பில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு என தீர்ப்பு வழங்கிய சர்வதேச நிபுணர் குழு**

**1. பேரா. டேனியஸ் ஃபியர்ஸ்ட்யீன்.**

சர்வதேச இனப்படுகொலைப் பற்றியான பேரறிஞர்கள் குழுவின் தலைவர், அர்ஜண்டீனாவின் பியூனஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தின் இனப்படுகொலைக்கான மையத்தின் பேராசிரியர்.

**2. திரு. டெனிஸ் ஹாலிடே,**

ஐ.நாவின் துணை பொதுச் செயலாளராக இருந்தவர். ஐ.நாவின் 34 வருடங்களாக பணியாற்றி, ஈராக்கின் மீது பொருளாதாரத் தடையை பாதுகாப்பு அவை கொண்டு வந்ததை கண்டித்து துணை பொதுச்செயலாளர் பதவியை இராஜனிமா செய்தவர்.

**3. பேரா.செவ்வேன் கரிபியான்**

சர்வதேச இனப்படுகொலை சட்டநிபுணரும், ஜெனிவா பல்கலைக்கழகம் மற்றும் நாச்டெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சர்வதேச குற்றவியல் சட்டம், மற்றும் சட்ட தத்துவம் குறித்தான பேராசிரியராக இருப்பவர். இவர் அரசுகளின் குற்றம் குறித்து ஆய்வு செய்பவர்.

**4. திரு. ஹாலூக் ஜெர்கர்.**

அரசியல் செயல்பாட்டிற்காகத் துருக்கி அரசால் சிறைப்படுத்தப் பட்ட அறிஞர். குர்து மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பவர்.

**5. பேரா. மன்ஃப்ரட் ஓ ஹின்ஸ்,**

ஜெர்மனியின் பிரிமென் பல்கலைக்கழகத்தின் அரசியல் சமூகவியல், சட்டத்தின் சமூகவியல்துறைப் பேராசிரியர். நமீபியா. மேற்கு சஹாராவின் விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவுப் போராட்டத்திலிருந்தவர். யுனெஸ்கோவின் மனித உரிமை மற்றும் ஜனநாயகத்தின் இருக்கையினை நிர்வகித்தவர்.

**5. ஜார்விஸ் ஹெலன்.**

இவர் கம்போடியாவில் நிகழ்ந்த படுகொலைகளுக்கான கம்போடிய நீதிமன்றத்தின் துவக்கத்தில் இருந்து பணியாற்றியவர். இனப்படுகொலை புரிந்த கேமர் ரூஜ் அரசின் மீதான விசாரணையை ஒருங்கிணைப்புக் குழுவில் பணியாற்றியவர். கம்போடிய டிரிபூனல் என்று அறியப்படும் சர்வதேச கலப்பு விசாரணை நீதிமன்றத்தில் மிக முக்கிய பணியாற்றியவர்.

**6. வழக்கறிஞர். ஜோஸ் எலியாஸ் எஸ்டேவே மோல்ட்டோ.**

திபெத்திற்கான சர்வதேச வழக்கறிஞர். திபெத் மற்றும் பர்மாவில் நிகழ்ந்த குற்றங்கள் குறித்து ஆய்வு செய்து வழக்குகளை பதிவு செய்தவர். வாலென்ஸியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத்துறைப் பேராசிரியர்.

**7. திரு. ஜேவியர் ஜிரால்டோ மொரியனோ**

கொலம்பியாவின் மனித உரிமைச் செயல்பாட்டாளர். இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆய்வு செய்தவர். மக்கள் தீர்ப்பாயத்தின் துணைத் தலைவர்.

**8. வழக்கறிஞர். காப்ரியல் டெல்லா மோர்ட்டா**

ருவாண்டா இனப்படுகொலைக்கான வழக்கறிஞராக பணி யாற்றியவர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை உருவாக்கு வதற்கான அரசின் பிரதிநிதியாக செயல்பட்டவர். யூகஸ்லாவியா விற்கான சர்வதேச விசாரணைக்கான சர்வதேச நீதிமன்றத்தில் சட்டத் துறையில் பணியாற்றியவர். ஜெனீவா மற்றும் ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் சிறப்பு பேராசிரியராக சர்வதேச் சட்டம் குறித்து பணியாற்றுபவர்.

**9. திரு. ஆய்ஸ்ட்டீன் டேவெட்டர்**

நோர்வே நாட்டினுடைய சர்வதேச சட்டம் குறித்தான நிபுணர். பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்த சட்ட விரோத படுகொலைகள் குறித்து தீர்ப்பாயத்தில் பங்களித்தவர்.

**10. திரு. ஜர்னி மாயுங்க்**

பர்மா நாட்டைச் சேர்ந்த மனித உரிமைப் போராளி. ரொஹிங்கோ இனப்படுகொலை குறித்தும், அதில் செயலற்றுப் போன ஆங்க்சாங் சுகியினை அம்பலப்படுத்தியவர்.

இவ்வாறு உலகில் பெரிதும் மதிக்கப்படும் நிபுணர்களால் 'இலங்கையில் நடந்த இனப்படுகொலையில் இந்தியாவுக்கும் பங்கு உண்டென்றும் இந்தியாவையும் விசாரணை செய்ய வேண்டும்' எனக் கூறியுள்ளனர். இதற்கு இந்திய விசுவாசிகள் என்ன சொல்லப் போகிறார்கள்?

## போருக்கு பின்னரான நிலைமை

இன்று இலங்கையில் இந்தியாவுக்கு மூன்று துாதராலயங்கள் இருக்கின்றன. இந்த சிறிய தீவில் இந்தியாவுக்கு மட்டுமே இவ்வாறு மூன்று துாதரலாயங்கள் உள்ளன. அதில் ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ளது. அதில் துாதுவராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் நலனுக்காக இந்த இந்திய துாதரகம் அமைக்கப்பட்டது என்றே எல்லோரும் நம்பினார்கள் அல்லது நம்ப வைக்கப்பட்டார்கள். ஆனால் அந்த இந்திய தமிழ் துாதர் அவர் கண் முன்னே நடைபெற்ற பாலியல் வல்லுறவுகள் குறித்து கருத்து எதுவும் கூற வில்லை. அந்த இந்திய தமிழ் துாதர் இலங்கை இராணுவத்தின் எந்த அக்கிரமங்களையும் கண்டித்ததில்லை. அவர் தமிழ் மக்களுக்கு கூறியது "நீங்கள் எல்லோரும் சிங்களம் படியுங்கள்" என்பது மட்டுமே. தமிழ் மக்களை சிங்களம் படிக்குமாறு கூறுவதற்காகவா யாழ்ப் பாணத்தில் ஒரு இந்தியத் துாதராலயம் அமைக்கப்பட்டுள்ளது?



**தமிழ் மக்கள் எல்லோரையும் சிங்களம் படிக்குமாறு கூறிய யாழ் இந்திய துணைத் துாதர் நடராஜன்**

ஆங்கிலேயக் காலத்தில் காலனி நாடுகளில் இருந்த வைஸாய் களைப் போன்றே இலங்கையில் உள்ள இந்திய தூதுவர்கள் நடந்து கொள்கின்றனர். பதவி ஏற்றதும் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச இந்திய தூதரைச் சென்று சந்தித்தது மட்டுமல்ல, ஜே.ஆர் ஜெயவர்த்தனா காலத்தில் இந்தியத் தூதராய் இருந்த டீக்சிற் எழுதிய புத்தகத்தைப் படிக்கும் போதும் இதை உணர்ந்து கொள்ள முடியும்.

"இந்தியா எப்போதும் தமிழ் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறது. புலிகள் அமைப்பு முட்டாள்தனமாக இராஜீவ்காந்தியைக் கொன்றதால்தான் இந்தியா புலிகள் அமைப்பை அழிக்க இலங்கை அரசுக்கு உதவியது" என்று சிலர் அப்பாவித்தனமாய் நம்புகிறார்கள். புலிகள் இராஜீவ்காந்தியைக் கொன்றிருக்காவிடினும்கூட இந்திய அரசால் அவர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள் என்பதே உண்மையாகும். ஏனெனில் புலிகள் தாங்கள் பலமாக இருக்கும் வரையில் தமிழ்ப் பகுதி களில் இந்தியாவையோ அல்லது வேறு எந்த வெளிச் சக்திகளையோ தமிழ்ப் பிரதேசங்களின் வளங்களைச் சுரண்டவோ அல்லது கொள்ளையடிக்கவோ அனுமதிக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டதும் அப்பிரதேசங்கள் யாவும் இந்தியா வுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளன. இதிலிருந்து முழு இலங்கையையும் கைப்பற்றுவதற்காகவே இந்தியா புலிகளை அழிக்க இலங்கை அரசுக்கு உதவியுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழ் மக்களின் பிரதேசமான வடமாகாணத்தில் பலாலி விமான நிலையம், காங்கேசந்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை, காங்கேசந்துறைத் துறைமுகம், மன்னாரில் எண்ணெய் வயல்கள், கிழக்கு மாகாணத்தில் புல்மோட்டை கனிம வளங்கள், சம்பூரில் அனல்மின்சாரம், சம்பூர் இறங்குதுறை, திருகோணமலை இயற்கைத் துறைமுகம் மற்றும் எண்ணெய்க் குதங்கள் என முக்கியமான எல்லாவற்றையும் தமிழ் மக்கள் தற்போது இந்தியாவிடம் பறிகொடுத்து விட்டு நிற்கிறார்கள். தமிழ் மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறி இனப் பிரச்சனையில் தலையிட்ட இந்தியா இன்று முழு இலங்கையையும் ஆக்கிரமித்திருப்பதைக் கண் முன்னே காண்கின்றோம்.

## இலங்கை மக்களின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்ட வரலாறு

இலங்கை ஒரு சிறிய தீவுதான். ஆனால் அந்த தீவின் மக்களோ வீரம் செறிந்த போராட்ட வரலாற்றின் சொந்தக்காரர்கள். இலங்கை மக்கள் எப்போதும் அநீதிக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக போராடி வந்திருக்கிறார்கள். அண்மைக் காலங்களில் அவர்களது போர்க்குணம் மடை மாற்றப்பட்டு தம்மிடையே மோதிக் கொண்டாலும் இன்னும் அவர்களது போர்க் குணம் குறைந்துவிடவில்லை.

மன்னர் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து பல மன்னர்கள் படையெடுத்தபோதும் எந்த மன்னர்களாலும் முழு இலங்கையையும் பலகாலம் அவர்களால் அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியவில்லை. அதன் பின்னர் காலனிய காலத்திலும்கூட போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரத்தையே கைப்பற்றினார்கள். அதைக்கூட அவர்களால் 100 வருடங்களுக்கு மேல் வைத்திருக்க முடியவில்லை. அதன் பின்னர் வந்த ஒல்லாந்தர்களும் இலங்கையின் கரையோரத்தையே கைப்பற்ற முடிந்தது. அவர்களும் 100 வருடங்களுக்கு மேல் இலங்கையை வைத்திருக்க முடியவில்லை. அதன் பின்னர் வந்த ஆங்கிலேயர்கள் முழு இலங்கையையும் கைப்பற்றியிருந்தாலும் அவர்களால் 150 வருடத்திற்கு மேல் வைத்திருக்க முடியவில்லை. எங்கேயோ தூரத்தில் இருந்த இலட்ச தீவுகளையும், அந்தமான் தீவுகளையும் கூட இந்தியாவுடன் இணைத்த ஆங்கிலேயர்களால் அருகில் இருந்த இலங்கைத் தீவை இந்தியாவுடன் இணைக்க முடியவில்லை.

சுதந்திரத்திற்கு பின்னர் காஸ்மீர், சிக்கிம் போன்ற நாடுகளை இந்தியாவுடன் இணைத்த இரும்பு மனிதர் பட்டேலாலும் கூட இலங்கையை இந்தியாவுடன் இணைக்க முடியவில்லை. இவர்கள் எல்லோராலும் இலங்கையை அடிமைப்படுத்த முடியாமைக்கு காரணம் இலங்கை மக்களின் அடிமைத்தனத்திற்கு எதிரான உணர்வும் அதற்கான வீரம் செறிந்த போராட்ட குணாம்சமுமே.

# இந்திய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடுவது எப்படி?

இன்று இலங்கையை இந்தியா முழுமையாக ஆக்கிர மித்துள்ளமையை சில உதாரணங்கள் மூலம் இதுவரை கண்டோம். ஆனால் இன்றும்கூட இத்தனையையும் சுட்டிக்காட்டியும் கூட இந்திய ஆக்கிரமிப்பு என்பதை ஏற்றுக் கொள்ளாமல் அதாவது இந்தியா தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும் என்று நம்பிக்கொண்டு சிலர் இருக்கின்றார்கள். அதுவும் சில தமிழ் ஆய்வாளர்கள் 'இலங்கையில் சீனா ஆதிக்கம் அதிகரித்துவிட்டது' என்றும் 'எனவே சீனாவுக்கு எதிராக தமிழ் மக்களுக்கு இந்தியா உதவி செய்யும்' என்றும் அரசியல் ஆய்வுகள் எழுதிக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்னும் சிலர் 'தற்போதைய இந்திய அரசு (மோடி - பி.ஜே.பி அரசு) இந்துமதச் சார்பானது' என்றும், 'எனவே "இந்து தமிழீழம்" கோரினால் அது நிச்சயம் உதவி செய்யும்' என்றும் கூறுகிறார்கள். உலகில் ஒரே 'இந்து நாடு' என அறியப்பட்ட நேபாள நாட்டிற்கு இந்திய அரசு உதவி செய்யவில்லை. மாறாக இலங்கையை ஆக்கிரமித்தது போல் நேபாளத்தையும் ஆக்கிரமிக்க முயல்கிறது. இந்த இந்திய ஆக்கிர மிப்பிற்கு எதிராக நேபாள மக்கள் ஒன்றிணைந்து பாரிய எதிர்ப்பினை அண்மையில் தெரிவித்துள்ளார்கள். இதனை தெரிந்து கொண்டும் இலங்கையில் "இந்துத் தமிழீழம்" அமைக்க இந்தியா உதவும் என்று இவர்கள் எப்படி நம்புகிறார்கள்? இந்தியாவானது சோசலிச தமிழீழத்தையோ அல்லது இந்து தமிழீழத்தையோ அல்லது எந்தவொரு தமிழீழத்தையுமோ அமைக்க ஒருபோதும் உதவப்போவ தில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்தியா ஒருபோதும் உதவாது, மாறாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் ஒரு எதிரியாகவே இருக்கும். இந்த உண்மையை இனியாவது அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இந்திய அரசுக்கு எதிராக காஸ்மீர் மக்கள் போராடுகிறார்கள். மணிப்பூர் மக்கள் போராடுகிறார்கள். நாகலாந்து மக்கள் போராடு கிறார்கள். அசாம், திரிபுரா மக்கள் போராடுகிறார்கள். மாவோயிஸ்டுக்கள் தலைமையில் ஆதிவாசி மக்கள் போராடு கிறார்கள். இந்த மக்களின் போராட்டங்களை எல்லாம் ஈவு இரக்கம் இன்றி இந்திய அரசு தனது இராணுவத்தின் மூலம் நசுக்கி வருகிறது. இவ்வாறு தன் சொந்த மக்களையே நசுக்கி வரும் இந்திய அரசு இலங்கையில் தமிழ் மக்களுக்கு உதவும் என்று நம்பும் சிலரின் முட்டாள்த்தனத்தை என்னவென்று அழைப்பது?



இலங்கை மீதான
இந்திய ஆக்கிரமிப்பு

இந்திய அரசு தரகு முதலாளி களின் அரசாகும். அதனால்த் தான் அது தனது பெரிய சந்தையை அமெரிக்க இரஷ்ய மற்றும் பிரித்தானிய வல்லரசுகள் சுரண்டுவதற்கு அனுமதித்து வருகின்றது. இந்திய பெரிய சந்தைக்காக இலங்கை போன்ற நாடுகளின் சிறிய சந்தையை இழக்க இந்த வல்லரசு நாடுகள் தயாராக உள்ளன. எனவே தான் அவ் ஏகாதிபத்திய நாடுகள் இந்தியா தனது 'பெரியண்ணைத் தனத்தை' இலங்கை போன்ற அதன் அருகில் உள்ள சிறிய நாடுகளில் காட்டுவதற்கும், ஆக்கிரமித்து சுரண்டுவதற்கும் அனுமதிக்கின்றன. எனவே இந்தியாவிற்கு எதிராக அமெரிக்கா உதவும், பிரித்தானியா உதவும் என நம்புவதும் முட்டாள்த் தனமாகவே இருக்கும்.


இந்தியா இலங்கையை மட்டும் ஆக்கிரமிக்கவில்லை. அது தன் அருகில் உள்ள மாலைதீவை ஆக்கிரமிக்கிறது. அது நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளையும் ஆக்கிரமிக்கிறது.

அது பங்களாதேஸ், பாகிஸ்தான் நாடுகளையும் ஆக்கிரமிக்க முயல்கிறது. இவ்வாறு அது தன் அருகில் உள்ள நாடுகள் அனைத்தையும் ஆக்கிரமித்துச் சுரண்ட முனைகிறது. அது தன்னை தென்கிழக்கு ஆசியாவின் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒரு 'பெரியண்ணை'யாக கருதி நாட்டாமை செய்ய முயல்கிறது. இதனை உலக ரவுடியான அமெரிக்க வல்லரசும் அனுமதிக்கிறது. எனவே இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுவதற்கு அமெரிக்கா மற்றும் எந்தவொரு வல்லரசும் மக்களுக்கு உதவப் போவதில்லை. உலக நாடுகளை தம்மிடையே கூறுபோட்டுக் கொள்வதே ஏகாதிபத்திய நாடுகளின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். இலங்கையை இந்தியா தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ள ஏகாதிபத்திய நாடுகளிடையே எழுதப்படாத ஒரு ஒப்பந்தம் உண்டு.

ஏதாவது ஒரு வல்லரசின் அடிவருடியாக இருந்தே அரசியல் பிழைப்பை நடத்தி வருகின்ற இலங்கை ஆட்சியாளர்கள் இந்திய ஆக்கிரமிப்பை விரட்டியடிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகவே இருக்கும். இவர்கள் தமது ஆட்சி நலன்களுக்காக முழுமையாக மண்டியிடுவர் அல்லது எல்லைக்குட்பட்டு எதிர்ப்பர். எனவே இந்திய ஆக்கிரமிப்பை முற்றிலும் விரட்டியடிக்கவும் ஏகாதிபத்தியங்களின் பிடியில் இருந்து இலங்கையை முழுமையாக விடுவிக்கவும் இலங்கையில் ஒரு உண்மையான ஜனநாயக அரசை அமைக்கவும் வலிமையுள்ள ஒரு புரட்சிகர இயக்கம் வளர்வதே இலங்கை மக்களுக்கு சரியான தீர்வாக அமையும்.

தோழர் தமிழரசன், மற்றும் தோழர் சண்முகதாசன் ஆகியோர் சுட்டிக் காட்டியதை ஏற்றுக் கொள்ள அன்றைய போராட்ட அமைப்புகள் தவறி விட்டன. அதன் விளைவை இன்று தமிழ் மக்கள் உட்பட இலங்கை மக்கள் அனைவரும் அனுபவிக்கின்றார்கள். இனியாவது தமிழ் மக்களுக்காக போராடும் அமைப்புகள் இவர்களின் கூற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ், சிங்கள உழைக்கும் மக்கள் மட்டுமல்ல தமிழகத்தில் உள்ள புரட்சிகர அமைப்புகளுடனும் ஒன்றுபட்டு, ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே இந்திய ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட முடியும்.

இலங்கை இனவாத அரசியல் தலைவர்கள் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் என இரு சாராரையும் ஏமாற்றி வருகிறார்கள். இனங்களுக்கிடையே இனவாதத்தைத் தூண்டி, இனங்களுக்கிடையே மோதல்களை உருவாக்கி, மக்களை பிளவு படுத்தி, முதலாளித்துவ ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயல்கிறார்கள் என்பதை தமிழ் சிங்கள மக்கள் அனைவரும் விளங்கிக் கொள்ளல் வேண்டும். பொது எதிரிக்கு எதிராக அனைத்து மக்களும் ஒன்றுபட்டு எல்லா முனைகளிலும் போரிட முன் வர வேண்டும். இந்திய ஆக்கிரமிப்பை மட்டுமல்ல அனைத்து ஏகாதிபத்திய ஊடுருவல் களையும் விரட்டியடிக்காத வரை தமிழ் சிங்கள மக்களுக்கு உண்மையான விடுதலையோ அன்றி சுதந்திரமோ சாத்தியம் இல்லை.



இந் நூல் ஆசிரியர் தோழர் பாலன் இலங்கையில் கரவெட்டியில் பிறந்தவர். தற்போது லண்டனில் வசித்து வருகிறார். இவர் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்னும் புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர். மார்க்சிச லெனினிச மாவோயிச சிந்தனைகளைத் தனது தத்துவ வழிகாட்டியாகக் கொண்டு இலங்கையில் ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிக்காக உழைத்து வருகிறார்.

இந்நிலையில் புரட்சிகர சக்திகளுடன் ஐக்கியம் மேற்கொண்ட மைக்காக 12.03.1991 அன்று சென்னையில் இவர் கைது செய்யப்பட்டார். இவர் மதுரை, சென்னை சிறைகளிலும் வேலூர், துறையூர், மேலூர் சிறப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டார். 17.02.1997 இல் இவர் நிரபராதி என திண்டுக்கால் முதன்மை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதும் இவர் விடுதலை செய்யப் படாது தொடர்ந்தும் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். இறுதியாக எட்டு வருட சிறை வாழ்க்கையின் பின்பு 03.04.1998 அன்று இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இவர் ஏற்கனவே இந்திய அரசின் ஈழத் தமிழ் அகதிகள் மீதான சிறப்பு முகாம் கொடுமைகளை வெளிப்படுத்துமுகமாக சிறப்பு முகாம் என்னும் சித்திரவதை முகாம் நூலை எழுதியுள்ளார். அந் நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப் பட்டுள்ளது.

இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்பை இலங்கை இந்திய மக்களுக்கு தெரியப்படுத்து முகமாக இந்நூலை அவர் எழுதியுள்ளார். இது ஒரு தோழர் பதிப்பக வெளியீடு ஆகும்.

